Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா6.00

# நமது ஈழநாடு

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா

ஜீவாகாரம்



அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1428) T.P.-2223565

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷ:பான் 04 (02.10.2003) வியாழக்கிழமை இதழ் :02

## 'நமது ஈழநாடு' பத்திரிகையின் அடிநாதம் மக்கள் விருப்பத்தை வெளிப்படுத்துகிறது!

### முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் யாழ். அரச அதிபர்



'நமது ஈழநாடு' பத்திரிகையின் செய்திகளின் அடிநாதம் மக்களுடைய விருப்பத்தை, அவர்களுடைய அபிலாஷைகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது. எனவே, இந்தப் பத்திரிகை இந்த மண்ணினுடைய தேவைகளை எடுத்துச் சொல்லும் ஒரு ஊடகமாகத் தொடர்ந்து செயற்படவேண்டும்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற 'நமது ஈழநாடு' பத்திரிகையின் முதலாம் ஆண்டு நிறைவுவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் உண்மையான செய்திகளை எமது மக்களுக்கு தந்தது மட்டுமல்லாது கட்டுரைகளையும், சமுதாய நோக்கம் கருதி வெளியிடும் தன்மைக்கு இந்த பத்திரிகை முன்னேறிக்கொண்டிருக்கிறது. அத்துடன் எமது மாவட்டத்தில் பல பத்திரிகைகள் இன்று வெளிவருகின்றன. அந்தப் பாரிய போட்டியிலே தன்னை (10 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு யோசனை குறித்து ஆராய புலிகள் இன்று அயர்லாந்து பயணம்!

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாக யோசனைகள் குறித்து அயர்லாந்தில் ஆராய்வதற்காக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்ட குழு இன்று தமது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன், சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன் ஆகியோர் கொழும்பு செல்கின்றனர்.

கிழக்கிலிருந்து மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் தலைமையிலான குழுவினரும் இவர்களுடன் இணைந்து அயர்லாந்திற்கான பயணத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

இடைக்கால நிர்வாக யோசனை குறித்து அயர்லாந்தில் விடுதலைப் புலிகளின் சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்த பின்னர் ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கும் சென்று இடைக்கால நிர்வாக திட்டவரைபு குறித்து இவர்கள் ஆராய்வர் என்று தெரியவருகிறது.

அயர்லாந்தின டப்ளின் நகரில் ஒரு வாரம் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் குழுவினர் மூன்று முக்கிய உயர்மட்டக் கலந்துரையாடல்களை நடாத்தவுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

# அரசாங்கமும் பிரதான எதிர்க்கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்!

### உலகவங்கி வதிவிடப் பிரதிநிதி வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், பிரதான எதிர்க்கட்சிகளும் கட்சி பேதமின்றி பொது இணக்கப்பாட்டுக்கு வருவது அத்தியாவசியமானது என்று உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் கரோல் வலியுறுத்தினார்.**

அவர் மேலும்,

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்புவதால் அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக்கொள்வதுடன் வடக்கு - கிழக்குக்கான நிர்வாகசபை குறித்து பிரதான எதிர்க்கட்சிகள் இணக்கம் காண வேண்டுமென்றும் தெரிவித்தா.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி சந்திரிகாவும் இது குறித்துக் கவனம் செலுத்தவேண்டியது அவசியம் என்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பிரதி (10 ஆம் பக்கம் பார்க்க)

#### பலாலி ஆசிரிய கலாசாலையை இடம்மாற்றக் கோரும்

## மாணவர் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது!

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் இயங்கிவரும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை அங்கிருந்து வேறோர் இடத்திற்கு மாற்றம் செய்யுமாறு கோரி, பாடசாலை மாணவர்களும், பெற்றோர்களும் மறியற்போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த மறியற்போராட்டத்தில் பெருமளவு மாணவர்களுடன் சேர்ந்து பெற்றோர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை தமது பாடசாலையில் சுமார் 12 வருடங்கள் இயங்கி வருவதாகவும், அதனால் தாம் தமது பாடசாலையில் உள்ள வளங்களை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் இருப்பதுடன், தற்காலிக கொட்டகைகளிலும், சிறிய ஓடைகளிலும் கல்விகற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைப் பிரதேசத்துக்குள் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்களை நுழையவிடாது, பிரதான வாயிலை மூடி மாணவர்கள் இந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பிணக்குப்படுறதே வேலையா உள்ளவை இணக்கப்பட்டுக்கு வருவினமோ?

#### யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில்

## 'நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்' நூல் நேற்று சிறப்புற வெளியிட்டுவைக்கப்பட்டது!

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் "நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்" எனும் நூல் வெளியீட்டு விழா, கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது.

மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சாள்ஸ் அன்ரனி படையணியைச் சேர்ந்த காண்டீபன் மாஸ்ரர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை வட போர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபனும், படையணிக் கொடியினை (10 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் எனும் நூல் வெளியீட்டு விழாவில், நூலை லெப். கேணல் கோபித் வெளியிட்டு வைக்க கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் பெற்றுக்கொள்கிறார்.

## அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகத்தை தமிழ்மக்களுக்கு பெற்றுத்தர வேண்டும்!

### தமிழ் மாணவர் ஒன்றியம் தேசியத் தலைவருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஒரு அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைத்து அதில் நீதி, நிதி, சட்டம், காணி பாதுகாப்பு என்பன உள்ளடங்கக் கூடிய அதிகாரம்மிக்கதொரு இடைக்கால நிர்வாகத்தை, தமிழ் மக்களுக்கு பெற்றுத்தரவேண்டுமென யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் தேசியத் தலைவர் வே.பிரபாகரனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களின் மனங்களில் நிறைந்திருக்கும் எமது பாசமிகு தேசியத் தலைவர் அவர்கட்கு தமிழ் மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email jaffna @ expoavi .com
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்

# நமது ஈழநாட்டின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்விலிருந்து...



மங்கள விளக்கேற்றுவோர் இடமிருந்து வலமாக - யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராஜா, நமது ஈழநாடு பொதுமுகாமையாளர் முருகதாஸ், செய்தி ஆசியர் கண்ணன்.





ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்படுகின்றன.





நிகழ்வில் கலந்துகொண்டோர்



நிகழ்வில் சிறப்புரையாற்றியோர் இடமிருந்துவலமாக - யாழ்.அரச அதிபர் பத்மநாதன், ஈழநாட்டின் முன்னாள் பிரதம ஆசிரியர் கோபாலரத்தினம், பேராசிரியர் சபா ஜெயராசா, நமது ஈழநாட்டின் நிர்வாக இயக்குநர் சிவமகாராசா, ஈழநாதம் பிரதம ஆசிரியர் ஜெயராஜ், யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் கயல்விழி.

# வடக்கு-கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் ஒரே நிர்வாக அலகாக பேணவேண்டும்!

## தமிழ்க் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணம் தொடர்ந்து ஒரே நிர்வாக அலகாகப் பேணப்படவேண்டுமென்று, நான்கு தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியபோது - ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) ஈரோஸ், புளொட் ஆகியவற்றின் தலைவர்கள் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்ந்து பேணப்படவேண்டும் என்று அவரிடம் வலியுறுத்தியதாக அவர்கள் விடுத்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழ்மக்களுக்கான அதிகாரப்பகிர்வு அவசியம் என்பதை ஜனாதிபதி அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தொடர்ந்து வலியுறுத்திவருவதை தாங்கள் பாராட்டுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா, த.சித்தார்த்தன், செ.சிறிதரன், சங்கர்ராஜி ஆகியோர் கைச்சாத்திடப்பட்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் சேதமாக்கப்பட்ட தேவாலயம் கட்டிமுடிக்கப்படும்வரை கடையடைப்பு!

## மன்னார் மாவட்ட முஸ்லிம் வர்த்தகர்கள் அறிவிப்பு

(மன்னார்)

மன்னாரில் நேற்றுமுன்தினம் சேதமாக்கப்பட்ட தேவாலயம் - கட்டி முடிக்கப்படும்வரை தமது வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்குமென, மன்னார் முஸ்லிம் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார்- ஊசிமுனையில் அமைக கப்பட்டிருந்த தேவாலயம், முஸ்லிம்களால் நேற்று முன்தினம் தகர்க்கப்பட்டது. இந்தவிடயம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் - தகர்க்கப்பட்ட தேவாலயம் - முஸ்லிம்களால் கட்டிக்கொடுக்கப்படும்வரை, வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என்று அங்கு தீர்மானிக்கப்பட்டது.

பிந்திக் கிடைத்த தகவல்களின்படி - மன்னாரில் முஸ்லிம்கள் தமது வியாபார நிலையங்களைத் திறந்து தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரியவருகிறது.

# நாட்டில் நிரந்தர சமாதானம் இன்னமும் ஏற்படவில்லை!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்



(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கத்தால் மாத்திரம் கடைப்பிடிக்கமுடியாது. இதனுடன் தொடர்புபட்ட அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

போர்நிறுத்த உடன்படிக்கையை எந்தச் சந்தர்ப்பத்திலும் ரத்துசெய்ய முடியும். அதனால் மிகவும் பயங்கரமான சூழ்நிலையே நாட்டில் ஏற்படும்.

தற்போதைய சூழ்நிலை - இறுதிச் சமாதானத் தீர்வு இல்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். தற்போது போர்நிறுத்தமே அமுலில் இருக்கின்றது என்றும் அமைச்சர் கூறினார்.

இந்தப் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து 19 மாதங்களாக கடைப்பிடிக்க அரசாங்கத்தால் முடிந்துள்ளது. எனினும், இதைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள அரசாங்கத்தினால் மட்டும் முடியாது. இதற்கு சகல தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

எனவே சமாதானத்தின் மூலம் கிடைக்கக்கூடிய பலன்களைப் பெறுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யானைகள் கொல்லப்படுவதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்!

மின்னேரியா வனவளப் பகுதியில் கடந்த ஒரு வருடகாலத்தில் நான்கு யானைகள் கொல்லப்பட்டதை எதிர்த்து, வனவளப் பாதுகாப்பு பிரிவு - உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனுவொன்றினைத் தாக்கல் செய்துள்ளது.

மின்னேரியாப் பகுதியிலிருந்து 7 கிலோமீற்றர் பகுதிக்கு முன்னே, பாதுகாப்பு பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ரயிலின் வேகம் இப்பகுதியில் குறைக்கப்பட வேண்டுமெனவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் பகுதியில் யானைகள் ரயிலில் அடிபட்டுக் கொல்லப்படுகின்ற நிகழ்வு தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

ரயிலில் அடிபட்டு கடந்த சனிக்கிழமையும் யானை ஒன்று இறந்துள்ளது. இவ்வாறான சம்பவங்களைக் கண்டித்து ரயில் ஓட்டுநருக்கு எதிராக இந்த அடிப்படை உரிமைமீறல் மனு- வன விலங்குப் பாதுகாப்பு பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## வன்னிக்கு கொண்டுசெல்லும் கற்களுக்கு தீர்வை விலக்கு!

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து, வன்னிப்பகுதிக்குக் கொண்டுசெல்லப்படும் கற்களுக்கான தீர்வை, நேற்று முதல் விலக்களிக்கப்படுவதாக நிதித்துறையின் ஆயப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து கொண்டுசெல்லப்படும் சல்லிக்கல், காட்டுக்கல், கருங்கல், கற்கள் (கிறேசர்) ஆகிய கற்களுக்கே ஆயப்பகுதியினரால் தீர்வை விலக்களிக்கப்பட்டுள்ளது. (108)

# மீளப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து சுதந்திரக்கட்சி எமக்கு அறிவிக்கவில்லை!

## ஜே.வி.பி அறிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் முயற்சிகள் தோல்வியடைந்த போதிலும், அவற்றை மீள ஆரம்பிப்பது குறித்து தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று ஜே.வி.பி கூறியுள்ளது.

முறையாக அழைப்பு விடுக்கப்பட்டால் கட்சியின் அரசியல்பீடம் கூடி இது தொடர்பாக தீர்மானிக்கும் என்று, கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பேச்சுக்கள் ஆரம்பமானால் அது வெளிப்படையாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஜனாதிபதியுடன் தொலைபேசித் தொடர்புகொண்டு உரையாடியதாக வெளிவந்த செய்தியை வீரவன்ச நிராகரித்தார்.

# கைக்குண்டு தயாரிக்கும் இடம் பொலிஸாரினால் கண்டுபிடிப்பு!

(கொழும்பு)

கிலுவுப்பிட்டிய என்ற இடத்தில் கைக்குண்டு தயாரிக்கும் இடத்தைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கைத்தொழிலில் ஒன்றாக இங்கு குண்டு தயாரிக்கும் தொழில் மேற்கொள்ளப்பட்டுவந்ததாகவும், தயாரிப்பு ஒரு இடத்திலும், விற்பனை இன்னொரு இடத்திலும் நடைபெற்றுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகத்திற்கிடமான முறையில் சென்ற நபர் ஒருவரைச் சோதனையிட்டபோதே, பொலிஸார் அவரிடமிருந்து கைக்குண்டுகளைக் கண்டுபிடித்தனர்.

கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், விசாரணைகளிலிருந்து அந்தக் கைக்குண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற இடத்தையும் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

கைக்குண்டு தயாரிப்பில் பாதாள உலகக் கோஷ்டியினருக்கும், அரசுக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் இருக்கலாம் என்றவகையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## ஹெரோயின் கடத்தியவர்கள் பொலிஸாரினால் கைது!

50 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினும, 5 லட்சம் ரூபா பணத்துடனும் 5 கடத்தல் நபர்களை முல்லேரியா பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இந்த ஹெரோயின் கடத்தல்காரர்களுடன் தொடர்புபட்ட வர்த்தகரான கோடீஸ்வரர் தலை மறைவாகியுள்ளார். இவருடன் கடத்தலில் ஈடுபட்ட 5 பேரே பொலிஸாரால் பிடிபடடுள்ளனர்.

கோடீஸ்வரரான வர்த்தகருக்கும், பொலிஸ் அதிகாரிக்கும் இடையே தொடர்பு இருந்ததாகவும், அதிகாரிகளுடன் தொலைபேசித் தொடர்பு வைத்துக்கொண்டிருந்ததாகவும் சந்தேகிக்கப்படுகின்றன.

இந்த கடத்தல் முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கும் இன்னொரு பொலிஸ் அதிகாரி உதவி புரிந்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. வர்த்தகரின் தலைமறைவுக்கும் இவர்கள் உதவியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தேசப்பற்று அமைப்பின் ஊர்வலம் முடிவடைந்தது

தேசப்பற்று அமைப்பு ஏற்பாடு செய்து நடத்திவந்த ஐந்துநாள் பாதயாத்திரை நேற்றுமாலை லிப்டன் சுற்று வட்டத்தை சென்றடைந்ததையடுத்து பூர்த்தியடைந்தது.

பாதயாத்திரையின் 5 ஆவது நர்ளான நேற்று கடவத்தையிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. மக்கள் விடுதலை முன்னணி மற்றும் பொது ஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாறையில் நெல் கொள்வனவுக்கு பத்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு!

## அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க

அம்பாறை மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு, பத்து மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களின் செயலாளர் ஐ.எம்.இப்ராகிம் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் கண்டி - ஹுங்குராங்கொத்தையில் உள்ள அமைச்சர் திஸநாயக்கவின் இல்லத்தில் வைத்து, இது தொடர்பாக கலந்துரையாடியபோதே அமைச்சர் திஸநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் அம்பாறை மாவட்ட மக்கள் - அரசு நெல்லினை நியாயமான விலையில் கொள்வனவு செய்ய வேண்டுமெனவும்- பசளை, கிருமிநாசினிகளின் விலைகளைக் குறைக்க வேண்டுமெனவும், இல்லையெனில் தாம் 2003/2004 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதில்லையெனவும்கூறி, ஆர்ப்பாட்டம் நடத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது. (07)





அரசுக்கு எதிராக தேசப்பற்று அமைப்பினர் நடத்திய பாதயாத்திரை நேற்று முடிவுற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# அத்துமீறி மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்!

## சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்குக் கடலில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் அயல்நாட்டு மீனவர்களைக் கைதுசெய்து, அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

அண்மைக்காலமாக வடக்கு - கிழக்குக் கடற்பரப்பில் இந்தியா மற்றும் ஏனைய நாட்டு மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருவதாக செய்யப்பட்டுவரும் முறைப்பாடுகளைத் தொடர்ந்து - நிதியமைச்சு இதைத் தடுப்பதற்காக புதிய சட்டமொன்றை அமுலுக்குக் கொண்டுவருமாறு ஆலோசனை வழங்கியதை அடுத்து, மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்குக் கடற்பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடிப்பவர்கள் மீது, அவர்களது நாட்டின் சட்டத்திற்கமைய சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,

அத்துமீறி மீன்பிடிப்பவர்களைக் கைது செயயும் பிரதேசத்தின் எல்லைப்பகுதிலுள்ள நீதிமன்றங்களில் இவர்கள் தொடர்பான வழக்குகளை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (01)



பருத்தித்துறை பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிக்கான பரிசில் வழங்கும் வைபவத்தில், இரு சிறுமிகள் இறைவணக்கத்தை பாடுவதையும், விழாவில் கலந்து கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, விழாத் தலைவர் எ.நடராசா சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் எஸ்.சரவணபவன் ஆகியோரை படத்தில் காணலாம். (17)

### அகில இலங்கை பாடசாலைவிளையாட்டுப் போட்டி

# தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் மொழிப்பிரச்சனையால் பாதிப்பு

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இந்த விளையாட்டு நிகழ்வில் மும்மொழி மாணவர்களும் பங்குபற்றிய வேளையிலும அறிவித்தல்கள், கட்டளைகள் தனிச்சிங்கள மொழியில் வழங்கப்பட்டதனாலேயே தமிழ், முஸ்லிம் மாணவர்கள் போட்டிகளில் வெற்றியீட்ட முடியாமல் போனதாக, நிகழ்வில் பங்குபற்றிய மாணவர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து இப்போட்டி நிகழ்விற்கு அறுநூறுக்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றியதாகவும், ஒலிபரப்புக்கள் யாவும் தனிச்சிங்கள மொழியில் அமைந்ததால், தம்மால் புரிந்து கொள்ள முடியாமல் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தமது பயிற்றுநர் இந்த விடயம் தொடர்பாக விளையாட்டு அவையினரிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஒலிபரப்புச் செய்யுமாறும், கட்டளைகளை ஆங்கில மொழியில் வழங்குமாறும் கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு உயரதிகாரிகள் மறுப்புத் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இப்போட்டியின் மைதான நிகழ்ச்சியில் பங்கு பற்றிய வீர,வீராங்கனைகளே வெற்றியீட்டியதாகவும், சுவட்டு நிகழ்வுகளில் பங்குபற்றியவர்கள் வெற்றியீட்டுவதற்குரிய சந்தர்ப்பம் இருந்தும், சிங்கள மொழியில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளால் வெற்றியீட்ட முடியாமல் போனதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் செயல் தொடர்பாகக் கருத்துக்கூறிய வயோதிபர் ஒருவர்- கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டிலும் எமது இனத்திற்குப் பாரபட்சமா என்று சினந்துகொண்டார். (83)

# தேசத்தின் வளத்தை பாதுகாப்பதுடன் அவற்றைப் பெருக்கவும் வேண்டும்

### அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன்

எமது தேசவளங்கள் பெருக்கப்பட வேண்டும். பனை வளம் எங்கள் தேசவளத்தின் ஒரு பெரும் வளமாகும். இந்த தேசவளத்தினை நாங்கள் பாதுகாப்பதும், அதைப் பெருக்குவதும் தேசத்தில் எங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும் என்று அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் நடைபெற்ற பனம் கைப்பணிக் கண்காட்சியில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்குகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்- இங்கு இந்த கண்காட்சிப் பொருட்கள், கைப்பணித் திறனை வெளிப்படுத்தியுள்ளதைக் கண்டு, பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான பல பொருட்களை, எமது தேசவளமான பனம் பொருட்கள் மூலம் உற்பத்தி செய்யமுடியும் என்பதை, இந்தக் கண்காட்சியின் மூலம் பயிற்சியாளர்கள் வெளிக் கொணர்ந்துள்ளனர்.

வெளிநாட்டிலுள்ள நண்பர்களின் வேண்டுகைக்கு இணங்க, அண்மையில் இந்தப் பனங்கைப்பணிப் பொருட்களை யாழ்ப்பாணத்தில் இருந்து பெற்றுக்கொடுத்தோம்.

எமது தேசத்தின் மிகப் பெரிய வளமாகப் பனை அமைந்துள்ளது. யுத்த அனர்த்தங்கள் காரணமாகப் பல மாவட்டங்களில், குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் பனை வளம் திட்டமிட்ட அழிப்பிற்கு உள்ளாகி, சிதைந்துபோயுள்ள நிலையினை நாம் இன்று காணக் கூடியதாகவுள்ளது.

எமது தேசியத் தலைவரின் ஆழ்ந்த சிந்தனையின் ஏற்பாட்டில், பனை வளம் அழிந்து விடாது பேணிக்காக்கும் வகையிலும், பனைகளின் உற்பத்தியினைப் பெருக்கும் வகையிலும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி நிறுவனத்தின் மூலம், பனை வளத்தின் விற்பனை நிலையமொன்று கிளிநொச்சியில் இன்னும் ஓரிரு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் மூலம் பனை வளத்தின் உற்பத்தி பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றார்:

## இலவச ஏடுகள் வழங்கல்

விஜயதசமியை முன்னிட்டு இணுவில் அண்ணா தொழிலகம் இலவசமாகப் பனையோலையிலான ஏடுகளை வழங்கவுள்ளது.

ஏடு தொடங்கும் நாளான விஜயதசமிக்கு முன்னர், ஏடுகள் தேவைப்படுவோர் தமது விபரங்களை கொடுத்து, அண்ணா தொழிலகத்தில் இலவசமாக ஏடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அண்ணா தொழிலக இயக்குநர் அறிவித்துள்ளார்.

# அன்புச்சோலையில் முதியோர்தின விழா

கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்புச்சோலை முதியோர் இல்லத்தில், முதியோர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

நேற்று தொடக்கம் ஏழாம் திகதி வரையிலான காலப்பகுதியில் சர்வதேச முதியோர் வாரத்தை, போர் மற்றும் அதனுடன் இணைந்த பல்வேறு காரணங்களால், தமது பிள்ளைகளை மற்றும் உறவினர்களை இழந்து, ஆதரிப்பவர்கள் யாருமற்ற, நிர்க்கதியாக ஆதரவு தேடித்தவித்த முதியோர்களை, அன்பாக அரவணைத்து, பராமரித்து வரும் சமுதாய முன்னேற்ற நிலையத்தால், நடாத்தப்படும் அன்புச்சோலை முதியோர் பேணலகத்தில், சிறப்பானமுறையில் கொண்டாடப்படவுள்ளது.

முதியோர் தினத்தை முன்னிட்டு, முதியவர்கள் மத்தியில் கலைநிகழ்வுகள் நடாத்தப்பட்டு, முதியவர்களைக் கௌரவிக்கவுள்ளனர். அன்புச் சோலை ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களிடையே முதியவர்களைப் பாதுகாத்தல் தேவை பற்றியும், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் புத்துலகப் பிரவேசம் கண்காட்சி நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் புத்துலகப் பிரவேசம் - 2003 என்ற கருப்பொருளைக் கொண்ட கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களத்தினால், நடுத்தரக் கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முகமாக நடத்தப்பட்ட இந்தக் கண்காட்சி சம்பந்தமான பத்திரிகையாளர் சந்திப்பு, கடந்த் திங்கள் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் - அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், ஆளுநரின் செயலாளர் அமிர்தலிங்கம், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மற்றும் தொழில்துறைத் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.விஸ்வலிங்கம், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சோதிலிங்கம், கணக்காளர் சிவானந்தகுமார், சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் வ.பெஞ்சமின், முகாமைத்துவ உத்தியோகத்தர் நடராஜா, யாழ்.மாவட்ட தொழில்துறைத் திணைக்கள அலுவலர் ப.ராகவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் - வருமானம் குறைந்த கைத்தொழிலாளர்களை ஊககுவிப்பதற்காகப் பல உதவிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், இலவசப் பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

அத்துடன், அழிந்து வரும் நெசவுத் தொழிலை ஊக்குவித்து, மேம்படுத்தும் நோக்கில் சிறுதொகைப் பணத்துடன் பயிற்சிநெறிகளை வழங்குவதன்மூலம், நெசவுத் தொழிலை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைத்தொழில் அபிவிருத்தி ஊக்குவிப்புச் சபையின் மூலம் தரமுள்ள பொருளை உற்பத்தி செய்தல், உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள், உற்பத்திப் பொருட்களைப் பழுதடையாது பாதுகாக்கும் தொழில் நுட்பம் என்பன சம்பந்தமாகக் கைத்தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாகவும், தொழில்துறைத் திணைக்களப் பணிப்பாளர், ஆர். விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

## மகிடாசூர சங்கார நிகழ்வு

மட்டுவில் அருள் மிகு பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை மகிடாசூர சங்காரம் நிகழவுள்ளது.

தற்போது நடைபெறும் நவராத்திரி விழா நிகழ்வுகளில் ஏனைய ஆலயங்களில் அம்பிகை - மகிடாசுரன் என்னும் அசுரனை அழித்த நிகழ்வு - மானம்பூ என்னும் வாழை வெட்டு மூலம் நினைவு கூரப்படுகிறது.

தென்மராட்சியிலுள்ள ஆலயங்களில் இவ்வாலயத்தில் மட்டுமே மகிடாசூர சங்காரம் - போராக நிகழ்த்திக் காட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. (24)

# கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறியோருக்கு கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்ற நிதிக்கு விண்ணப்பித்தோரில், 7130 பேருக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரைச்சி பிரதேச செயலக 32 கிராம சேகவர் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்த மக்களுக்குப் பதிவுகளை மேற்கொண்ட ஒழுங்கில் அவர்களுககான நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில், 6641 பேருக்கு 25,000 ரூபாவும், 453 பேருக்கு 15,000 ரூபாவும், ஒருவருக்கு 11,000 ரூபாவும், 3 பேருக்கு 10,000 ரூபாவும், 6 பேருக்கு 8,000 ரூபாவும், 26 பேருக்கு 3000 ரூபாவும் எல்லாமாக - 17 கோடியே 29 இலட்சத்து 87ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற நிதிக்கு விண்ணப்பிக்காதவர்கள், விரைவாக தம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கரைச்சி பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

# நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் சிறுவர்களுக்கான நூலக வசதி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் சிறுவர்களிடத்தில் வாசிப்பு ஆர்வத்தையும், கல்வியையும் மேம்படுத்தும் வகையில், சிறுவர் நூலகமொன்று - கடந்த திங்கட்கிழமை தீவக வலயக் கல்வி அபிவிருத்திக்கான, உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.ஸ்ரனிஸ்லாஸால், வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கான நூல்களை முறைசாராக் கல்விப்பிரிவு மாணவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளதுடன், மேலும், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் தமது பிறந்தநாள் நினைவாகவும், நூல்களை அன்பளிப்புச் செய்வதன் மூலம், இந்தச் சிறுவர் நூலகத்தினைப் பெருமளவு விஸ்தரிக்கலாம் என, வித்தியாலய அதிபர் திருமதி சா.கிருஸ்ணதாஸ் தெரிவித்தார். (113)

# நூற்று ஐம்பது வீட்டுத்திட்டத்திற்கு எக்கோ நிறுவனம் நிதி உதவிகள்

எக்கோ நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ், 150 வீடுகள் அமைக்கும் திட்டம் கடந்த 17 ஆம் திகதியிலிருந்து நடைபெற்று வருகிறது. இதில் மாதகல் பிரதேசத்தில் 75 வீடுகளும், குருநகர் பிரதேசத்தில் 75 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகிறது. இதனைக் கியுடெக் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதற்கு பிரான்ஸ் - கரித்தாஸ் நிறுவனம் நிதியுதவி வழங்கவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஒவ்வொரு வீடும், அறுபதினாயிரம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. (91)

# பொலித்தீன் பாவனையை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்கக்கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தி, சூழலைப் பாதுகாக்க - பொது மக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும் எனக் கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் அழைப்பு விடுத்தார்.

திருமுறிகண்டிப் பகுதியில் பொலித்தீன் பாவனை ஓரளவு கட்டுப்பாட்டிற்கு வந்துள்ளது. அங்கு வியாபாரம் செய்யும் வியாபாரிகள் - கடுதாசிப் பைகளையே பாவித்து வருகிறார்கள்.

எனினும், கிளிநொச்சி நகரப் பகுதிகளிலுள்ள உணவகங்கள், விடுதிகள், சிறு உணவகங்கள், நடைபாதை வியாபாரிகள் சமூக உணர்வோடு செயற்பட்டு, பொலித்தீன் பாவனையை முற்றாக நிறுத்தி, அலுமினியப் பாத்திரங்களைச் சுடு நீரில் கழுவிப் பாவிக்கலாம்.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய வாழையிலையைப் பயன்படுத்திப் பரிமாறுவதன் மூலம், எமது பகுதிகளிலுள்ள விவசாயிகளின் பொருளாதாரத்தை அதிகரிப்பதுடன், சூழலையும் மாசடையாது பாதுகாக்கமுடியும்.

எனவே, எமது - எதிர்கால சந்ததியினரின் நன்மைகருதி அனைவரும் ஒன்றுபட்டு, பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (17)

## உழைப்போம் உயர்வோம்!

## தொழில் மலர்

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு

# சுயமுயற்சி சுழற்சிமுறை கடன்திட்டம்

யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்கள் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் பொருட்டு விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், மீன்பிடி போன்ற சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும், விஸ்தரிக்கவுமாக, 1999 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட சுழற்சி முறைக்கடன் திட்டமானது U.N.D.P நிறுவனத்தினால், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியதவியுடன் அறிமுகப் படுத்தப்பட்டது. இதுவரை குடாநாட்டிலுள்ள 23 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிற்கு மொத்தமாக ரூபா 189,000,00 வழங்கப்பட்டது.

முதற்கட்டமாக வலிகாமம் பகுதியிலுள்ள அளவெட்டி-மல்லாகம், அச்சுவேலி, சுன்னாகம், பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, ஆகிய 5 சங்கங்களுக்கும், அதனுடன் இணைந்து தீவுப்பகுதியிலுள்ள நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை போன்ற சங்கங்களுக்குமாக மொத்தம் பத்துப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிற்கும், ரூபா 123,000,00 நிதி கடனாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் - U.N.D.P நிறுவனத்தினூடாக வழங்கப்பட்டது. மக்களின் அதிகரித்த நிதித்தேவை காரணமாகச் சில சங்கங்கள் தாமாகவே முன்வந்து, ஒரு தொகை நிதியை இக்கடன் திட்டத்தில் இட்டன. அவ்வகையில் அச்சுவேலி, பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிடத்தக்கவை. அவுஸ்திரேலிய அரசாங்கம்-U.N.D.P நிறுவனத்தினூடாக வழங்கிய நிதியுடன் சங்கங்களின் நிதியும் சேர்ந்து சுழற்சிமுறைக்கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, பல பயனாளிகளுக்கு நன்மையைப் பெற்றுக்கொடுத்துள்ளது. அந்த வகையில் ஒவ்வொரு சங்கங்கள்ரீதியாக, U.N.D.P. நிறுவனத்தினூடக வழங்கப்பட்ட நிதி, சங்கங்களின் பங்களிப்பு, இவற்றின் மூலம் பயன் பெற்ற பயனாளிகளின் தொகை போன்றவற்றை நோக்கின்-

| சங்கத்தின் பெயர் | யு. என். டி. பி. நிதி | சங்கத்தின் பங்களிப்பு | பயனாளிகளின் எண்ணிகை |
|---|---|---|---|
| அளவெட்டி- மல்லாகம் | 1150000 | - | 362 |
| அச்சுவேலி | 1700000 | 914431 | 682 |
| சுன்னாகம் | 1200000 | - | 111 |
| பண்டத்தரிப்பு | 1700000 | 240000 | 820 |
| தெல்லிப்பளை | 1450000 | 391000 | 167 |
| நெடுந்தீவு | 1000000 | - | 161 |
| காரைநகர் | 1000000 | - | 331 |
| ஊர்காவற்றுறை | 1000000 | - | 300 |
| புங்குடுதீவு- நயினாதீவு | 1000000 | - | 200 |
| வேலணை | 700000 | - | 126 |
| மொத்தம் | 11900000 | 1545431 | 3256 |

என்றவாறு காணப்படுகிறது.

இரண்டாம் கட்டமாக ஏழு ப.நோ.கூ.சங்கங்களுக்குத் தல ஐந்து இலட்சம் ரூபா வீதம், 35 இலட்சம் ரூபா U.N.D.P. நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. சங்கங்களும் தலா 5 இலட்சம் ரூபா இடவேண்டும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இதன்பேரில் சங்கங்களும் தமது பங்களிப்பை மேற்கொண்டன. இந்நிதியின்மூலம் 605 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். இது மட்டுமன்றி, இந்த இரண்டாம் கட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஏழிற்கும், தலா ஒரு கணினி வீதம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இக்கடன் வழங்கும் நடவடிக்கைகளை நவீனமயப்படுத்தித் துரிதப் படுத்துவதற்காகவே, ஒவ்வொரு சங்கங்களிலிருந்தும் தலா இரண்டு பேருக்குக் கணினி தொடர்பான மூன்று மாத முழு நேரப் பயிற்சிநெறியும் வழங்கப்பட்டது. சங்கங்களின் நிதி விபரத்தைப் பார்க்கும்போது- நிலைமை பின்வருமாறு உள்ளது.

| சங்கத்தின் பெயர் | யு. என். டி. பி. நிதி | சங்கப் பங்களிப்பு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நீர்வேலி | 500000 | 900000 | 50 |
| உடுப்பிட்டி | 500000 | 500000 | 43 |
| நல்லூர் | 500000 | 360000 | 42 |
| கைதடி | 500000 | 350000 | 78 |
| சங்கானை | 500000 | 500000 | 113 |
| மானிப்பாய் | 500000 | 500000 | 142 |
| கட்டைவேலி | 500000 | 500000 | 135 |
| மொத்தம் | 3500000 | 3610000 | 605 |

மூன்றாம் கட்டமாக ஆறு ப.நோ.கூ.சங்கங்களுக்கும் 3750000 ரூபாவும், தலா ஒரு கணினியும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால், U.N.D.P. நிறுவனத்தினூடாக வழங்கப் படவுள்ளது. அந்த வகையில் வழங்கப்படவுள்ள நிதி விபரம் பின்வருமாறு.

| சங்கத்தின் பெயர் | நிதி |
|---|---|
| சாவகச்சேரி | 750000 |
| கொடிகாமம் | 750000 |
| மருதங்கேணி | 750000 |
| பருத்தித்துறை | 500000 |
| புலோலி | 500000 |
| யாழ்ப்பாணம் | 500000 |
| மொத்தம் | 3750000 |

யாழ்.குடாநாட்டில் U.N.D.P. நிறுவனம் மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வழங்குவதில் கூட்டுறவுத் திணைக் களத்துடன் முற்றுமுழுதாக இணைந்து செயற்படுகிறது. இதுவே இக்கடன் திட்டத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

கடன்பெறும் பயனாளிகள் - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினாலேயே சிபாரிசு செய்யப்பட்டு, அவரது அனுமதியின் பேரில்தான் கடன் வழங்கப்படுகிறது. இது உண்மையான பயனாளிகள் இனங்காணப்பட்டுள்ளமையை உறுதிப் படுத்துவதற்காகும். இக்கடன் தொடர்பான மேற்பார்வை கூட்டுறவுத் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்படுவதனால், இத்திட்டம் எப்போதும் சிறப்பாகவே நடைபெறும் என்பது உறுதி. இதற்காக இரு உத்தியோகத்தர்கள் விசேடமாகக் கூட்டுறவுத் திணைக்களத்தினால், முற்றாக U.N.D.P. நிறுவனத்தின் திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், ஏனைய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் U.N.D.P. கடன் மேற்பார்வைப் பணிகள் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டத்தின்கீழ் U.N.D.P. நிறுவனத்தினால், 18% வட்டி அறவிடப்படுகிறது. இவ்வாறு அறவிடப்படும் வட்டியில் 3% சங்கங்களின் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப் படும். மிகுதி 15% U.N.D.P. சுழற்சிமுறைக்கடன் நிதியுடன் சேர்க்கப்பட்டுத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறு U.N.D.P. நிதியுடன் சேர்க்கப்பட்ட வட்டி, ஒரு போதும் மீளப்பெறப்படமாட்டாது.

சில சங்கங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக - அச்சங்கங்களிலிருந்து சிறப்பாகச் செயற்படும் சங்கங்களுக்கு நிதிமாற்றம் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் இத்திட்டத்திற்கு உட்பட்ட ப.நோ. கூ.சங்கங்களிலிருந்து, மாதாந்த அறிக்கை பெறப்பட்டு, கூட்டுறவுத் திணைக்களத்தினால் பரிசீலிக்கப்பட்டு, U.N.D.P. கடன் தொடர்பான நிலவரம், குறைபாடுகள், வளர்ச்சி நிலைமைகள் அறியப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகிறது.

U.N.D.P. நிறுவனமானது கூட்டுறவுத் திணைக்களத்துடன் பின்னிப்பிணைந்து செயற்பட்டு வருகிறது. இந்த வகையில் கூட்டுறவுத் திணைக்களத்திற்கான செயற்பாட்டை ஊக்குவிப்பதற்காக 10 கணினிகள், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பனவும் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதில் ஒன்பது கணினிகளும், 5 மோட்டார் சைக்கிள்களும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது.

எனவே அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்றான U.N.D.P. நிறுவனமானது கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்த வகையில் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

# இணையம் ஆளும் இன்றைய உலகம்

5. **www.naresa.ac.lk.**

இது விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் **National Science Forndation** இனின் இணையத்தளமாகும். மேலும் இதன் **Home page** இல் **Research Areas** என்பதன் கீழ், **Agricultural Science and forestry, Bio tecnology, Biological Science** போன்ற பல துறைகளுக்கான இணைப்புக்கள் காணப்படுகின்றன.

6. **www. Moesl.org**

இதில் கல்வி அமைச்சு பற்றிய தகவல்கள், திணைக்களங்கள், வெளியீடுகள், கல்வி முறை, கல்வி நிறுவனங்கள் ஆகிய இணைப்புக்களினூடாக அவை ஒவ்வொன்றும் பற்றிய தகவல்களை அறியலாம்.

7. **www. rassava.com**

இந்த இணையத்தளம் **Ichthus Holdings company** ஆல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் வேலை தேடுபவர்கள் விண்ணப்பங்களை அனுப்ப முடியும். இதில் தனியார், அரச நிறுவனங்களைத் தொடர்புகொண்டு, தகுதியான விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்ய வசதி உண்டு.


இது வேலை தேடுபவர்களையும், வேலை வழங்குவோரையும் இணைக்கும் பாலமாக விளங்குவதுடன், வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் உதவுகின்றது. இலங்கையில் இவ்வாறான இணையத் தளங்கள் உருவாக்கப்பட்டமை, வேலை தேடுவோருக்கும், வேலை வழங்குவோருக்கும் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

8. **www.news.lk.**

இது விசேட ஊடகத் தகவல் நிலையத்தின் முகவரியாகும். இதனூடாக விசேட ஊடகத்தகவல் நிலையத்தால் வெளியிடப்படும் சகல தகவல்களையும் பெறலாம்.

9. **www.Srilankanclections.com.**

இத்தளத்தினூடாக தேர்தல் முடிவுகள் உடனுக்குடன்



மும்மொழிகளிலும் தெளிவாக அறியக்கூடியதாக உள்ளது. மேலும் மாவட்டங்களில் கட்சிகள் பெற்ற வாக்கு கள், ஆசனங்கள் (**Seats**) போன்றவற்றை தெளிவாக அறியலாம்.

10. **www.doenets.lk**

இதுவரையிலும் நாம் பார்த்ததைவிட, மாணவர்களுக்கு மிகவும் தேவையான இணையத்தளமாக இது விளங்குகின்றது. அண்மைக்காலமாக மாணவர்கள் பரீட்சை முடிவுகள் வெளியானதும், இணையச்சேவை வழங்கும் இடங்களில் முண்டியடித்துக்கொண்டு நிற்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இந்த வகையில் இந்த இணையத்தளமானது **G.C.E. (O/L), G.C.E. (A/L)** மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் என்பவற்றை அறிந்துகொள்ள உதவுகின்றது.

(இதில் இதன் **Home page** ஐ போடவும்)

இதில் எவ்வாறு நாம் பரீட்சை முடிவினைப் பெறுவது என்று பார்ப்போம். நாம் இத்தளத்தினுள் நுழைந்து, எமக்கு தேவையான இணைப்பை தெரிவுசெய்தல் வேண்டும். **[G.C.E. (A/L). G.C.E. (O/L)]** இதில் பரீட்சாத்திகளுக்குரிய சுட்டிலக்கம் (**Index Number**) உள்ளீடு செய்யும் இடத்தில் சுட்டிலக்கத்தினை உள்ளீடு செய்து, **Submit** என்ற **Button** ஐ அழுத்தினால், அந்தச் சுட்டெண்ணுக்குரிய பரீட்சைப் பெறுபேறுககள் திரையில் வெளியீடாகத் தோன்றும். இவ்வாறு, இலங்கையில் பல்வேறு பயனுள்ள இணையத் தளங்கள் உண்டு. ஆனால், இவற்றினைப் பயன்படுத்துவோர் மிகக் குறைவாகவே உள்ளனர். இந்தநிலை மாறி, பயனுள்ள இணையத்தளத்தினைப் பலர் பயன்படுத்தி, பயன்பெற வேண்டும் என்பதே இணையத்தள வெளியீட்டாளர்களின் பெருவிருப்பமாகும்.

இவ்வளவு காலமும் இணையத்தளத்தில் காணப்படும் உன்னத சேவையான மின்அஞ்சல் (**E-mail**) இன் பயனையும், நாட்டு நிலவரம் அடங்கிய செய்திகள், விளையாட்டு முடிவுகள், வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்கள் போன்றன இணையத்தள மூலமாக அறியக்கூடியதாக இருந்தது.

(*6 ஆம் பக்கம் பார்க்க*)

5ஆம் பக்கம் தொடர்ச்சி........

# தொழில் வங்கி



| நிறுவனம் | டனிஷ் அகதிகள் நிறுவனம் (DRC) | இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் |
|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | 1. நிர்வாகி - வவுனியா<br>2. நிர்வாக உதவியாளர் - வவுனியா<br>3. செயலாளர் / வரவேற்பாளர் -வவுனியா | ஆராய்ச்சி அலுவலர் பதவிகள் (தமிழ்) |
| அடிப்படைத் தகுதி | 1. இவை தொடர்பான பட்டதாரி முகாமைத்துவ, நிர்வாக அனுவபம். நிதி அறிக்கை தயாரித்தல். ஆங்கில புலமை.<br>2. க.பொ.த (உயர்தரம்) Book - Keeping அனுபவம் கணினி அறிவு (Word and Excel) ஆங்கில புலமை.<br>3. க.பொ.த (உயர்தரம்) உரியதுறை அனுவவம் கணினி அறிவு (Word and Excel) ஆங்கில புலமை. | 1. இலங்கைப் பிரஜை.<br>2. தமிழ்மொழி, இந்து நாகரிகம், இந்துசமயம், நுண்கலைகள் ஏதேனும் இரண்டைக் கொண்ட கலைமாணிப்பட்டம் அல்லது இந்து நாகரிகம் / இந்துசமயம் பாடத்தில் சிறப்புப்பட்டம்.<br>3. இந்துசமயம், கலாசாரம் பற்றிய அறிவு.<br><br>வயதெல்லை 18 - 45 |
| விண்ணப்ப முடிவு திகதி | 06.10.2003 | 14.11.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# தூய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு

தொழில்நுட்பம் என்ற பதத்திற்கு "புதியமுறை" என்ற கருத்தே விளக்கமாகக் கொள்ளப்படுகின்றது. தொழில் நுட்பத்துடன் "தூய" என்ற பதம் இணைக்கப்பட்டுள்ளது. தூயதொழில்நுட்பம் என்பது குறைந்த சூழல் மாசுகளை (Pouuranrs) ஏற்படுத்தக் கூடியவாறு அமையும் சிறந்த தொழில்நுட்ப முறைகளாகும். **Clean Technology has been defined as integrating environmental constraints in the production proces in order to produce better and reduce pollution.** தூயதொழில்நுட்பம் - சூழல் காரணிகளுடன் இணைந்து சென்று, கழிவு முகாமைத்துவத்தைச் (**Waste management**) சீர்செய்வதனால் இக்காலகட்டத்தில் தூய தொழில்நுட்பம் மிக இன்றியமையாதது.

மனிதனின் தேவைகள் வளர்ந்து கொண்டுபோக, மூல வளங்களின் பாவனையும் அதிகரிக்கிறது. அதாவது, மனிதன் சொகுசான வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் வேலைப்பளுவற்ற சூழலை உருவாக்க விரைவான கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடு அவசியம் தேவை. தேவைகள் நிறைவுறும் பட்சத்தில், வளர்ந்து வரும் கைத்தொழில் சூழலைப் பாதிக்காவண்ணம், புதுவகையான "தூய தொழில்நுட்பம்" சூழல் தாக்கத்தைக் கட்டுப் படுத்தும். கந்தகவீரொக்சைட்டு, காபனோஈரொக் சைட்டு, ஓசோன், நைதரசன் ஒட்சைட்டுக் கள், காற்றில் தொங்கலான பதார்த் தங்கள் (**Suspended particulate matters**) என்பன வாயு வடிவிலுள்ள மாசுக்களாகும். இவைகள் சேர்ந்து சூழல் தரக்குறைவை ஏற்படுத்துகின்றது. இதனைக் கட்டுப்படுத்த 1989 இல் **Roustan** என்பவர் தூய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து வைத்தார்.



சூழலியலாளர்கள் - தூயதொழில்நுட்பம் என்ற பதத்தைப் பல வடிவங்களில் பயன்படுத்துகின்றனர்.

- ❖வளங்களைச் சிக்கனப்படுத்தல்.
- ❖வளங்கள் மீளளிப்புச் செய்தல்.
- ❖வளங்களை விகிதமுறைப்படி உபயோகித்தல்.
- ❖கழிவைக் குறைத்தல்.
- ❖மாசுபடலைத் தடுத்தல்.
- ❖குறைந்த கழிவு, தொழில்நுட்பம்.
- ❖கழிவற்ற தொழில்நுட்பம்.

### தூய தொழில்நுட்ப தத்துவங்கள்..

தத்துவங்கள் 3 படிகளில் அமைந்து, மாசற்ற நிலைப் பாட்டைத் தோற்றுவிக்கிறது.

1. தற்போதுள்ள உற்பத்தி முறைகளைத் தரமுயர்த்தல் (**Optimigation**)
2. உற்பத்தி முறைகளை நவீன மயமாக்கல் (**Modification**)
3. உற்பத்தி முறைகளை மாற்றி அமைத்தல் (**Changing the Process**)

உற்பத்தி முறைகளை நுணுக்கமாக அறிந்து, அதன் வினைத்திறனான நிலையையடைய முயற்சிக்கும் பொழுது, கழிவுகள் கட்டுப்படுத்தப்பட்டு, சீரானமுறையை எல்லா உற்பத்தி நிறுவனங்களும் மேற்கொள்ளல் "தரமுயர்த்தல்" எனலாம். கழிவுகளை மீண்டும் பயன்படுத்தும் முறைகளைத் தேர்ந்தெடுத்து, புதிய இயந்திரப் பகுதிகளை வடிவமைத்துக் கொடுத்தல். "நவீன மயப்படுத்தல்" எனலாம். நுண் மூலகங்களினதும் கழிவுகளைத் திருப்பப்பெறும் வண்ணம், அமைப்பு முறையினை மாற்றம் செய்தல் - மாற்றியமைத்தல் எனப் படும்.

உள்ளீடு, மனிதவளம், சக்தி என்பவற்றைப் பயன்படுத்தி, வெளியீடு உற்பத்தி செய்யும்பொழுது, திண்ம - திரவ கழிவுகள் எமக்குக் கிடைக்கிறது. கழிவுகளைப் பயனுள்ள பொருட்களாக மாற்றுவதனால், தூயதொழில்நுட்பம் வெற்றிபெறும். உதாரணமாக - திக்கம் வடிசாலையில் தோன்றும் மெதையின் அற்கோல் ($CH_3OH$) பயனற்று போமல்டிகைட்டாக வளியை அடைவது, சூழலுக்கு கேடு விளைவிப்பதோடு, இலாப இழப்பு ஏற்படுவதும் தவிர்க்க முடியாததே.

### தூய தொழில்நுட்ப பயன்பாடுகள்

எமக்குத் தேவை பாதுகாப்பான சூழல். (**Safety environment**) இதனை அடைய, அடிப்படைத் தேவைகளான நீர், வளி, உணவு, உறையுள் என்பன சீராக அமைவதுடன், சூழல மாற்றங்களும் தவிர்க்கப்படல் வேண்டும். இதன் பயன்களாவன.

1. சூழல் பாதுகாப்பு.
2. சக்தி, மூலப்பொருட்களைச் சிக்கனப்படுத்தல்.
3. வெளியீடுகளின் தரம் பேணப்படல்.
4. உற்பத்தி இலாப அளவு அதிகரிப்பு.
5. அழிவுச் செலவுகள் கட்டுப்படுத்தப்படும்.
6. தரமான சூழல் பாதுகாப்பு.

பல வகைப்பட்ட நன்மைகளைத் தூய தொழில்நுட்பம் வழங்குவதனால், அது பற்றிய அறிவை எமது மக்கள் பெற்றுக்கொள்ளல் அவசியமாகிறது. இதற்கு இயந்திர சூழல் (**Machinery environment**), பரிசோதனைக்கல்வி கற்றல் (**Experimental learning**) என்ற இரண்டும் மக்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்படவேண்டும். பிற்சந்ததியினர் - இயந்திர

# விஞ்ஞான முகாமைத்துவம் அவசியம்

பாவனைகளை அதிகமாக மேற்கொள்வது காணப்படினும், சமூகத்தில் பரிசோதனைக் கல்வி கற்றலில், பின்தங்கியே உள்ளனர்.

### சட்டவாக்கங்கள்

இலங்கையில் 1980 இல் கொண்டுவரப்பட்ட பாதுகாப்புச் சட்டங்கள், மேலும் திருத்தப்பட்டு, தூயதொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நெதர்லாந்தில் 1988 இல் கொண்டுவரப்பட்ட "தேசிய சூழல் கொள்கைத் திட்டம்" தூயதொழில்நுட்பத்தின் முன்னோடியாக அமைந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் **EPA (Environmental Prorection Agency) PPO (Pollution Prevention office) PPIC (Pollution Precaution Intormation clearing house)** என்பன தூயதொழில்நுட்பக் கொள்கையுடன் இணைந்து செயற்படுத்தப்படுகிறது. இங்கிலாந்தில் "**Royal commission**" உம், கனடாவில் '**FEARO** என்ற நிறுவனமும் தூயதொழில் நுட்பத்தினை நேரடியாக நடை முறைப் படுத்தலில் பங்களிக்கின்றன. இலங்கையில் மத்திய சூழல் அதிகார சபை (**CEA**) பொறுப்பாக உள்ளது.

### தூய தெழில்நுட்ப அணுகல்

இநத அணுகுமுறை என்பது தூய தொழில்நுட்பம் நடைமுறைப் படுத்தப்படுமிடத்து, வெளியேறும் திண்ம - திரவ கழிவு நீர் தரம் பற்றிய கருத்துகளை நிலைப்படுத்தல் ஆகும். அதாவது, கழிவு பரிகரணம் என்பதனைக் குறிக்கிறது. கழிவு நீரின் நிறம், வெப்பநிலை, கலங்கல்நிலை, மணம் என்ற பௌதீக காரணிகள் அடங்கும். இரசாயனப் பரிகரணம் என்பது திண்மக் கழிவு, உயிர்வாழ்வதற்கான ஒட்சிசன் தேவை (**BOD**), இரசாயன ஒட்சியேற்றும் திறன் (**COD**) போன்றவற்றை உள்ளடக்கும். **BOD** என்பது ஒரு நாளுக்கு 1லீற்றர் கழிவு நீரில் இருக்கக்கூடிய ஒட்சிசனின் மில்லி கிராம் அளவு. **COD** என்பது பொட்டாசியம்பேர் மங்கனேற்று ($KMNO_4$) அல்லது பொட்டாசியம் குரோமேற்று ($K_2CrO_4$) அளவைக் குறிக்கும். உயிரியல் சோதனை என்பது கழிவு நீரிலுள்ள (**Sewage**) பக்ரீரியா, பங்கசு, அல்கா, புரத்தோசோவா அளவைக் கணிப்பிடல் மூலம், இதன் அளவு திர்மானிக்கப்படுவது **BOD, COD** இன் பெறுமானத்தின் அடிப்படையிலேயாகும்.

இங்கு வெளியேறும் மாசுக்கள் பின்வரும் உபகரணங்களினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

1. காற்றற்ற வடிகட்டி.
2. துளையிடப்பட்ட நார்மிசை வடிகட்டி.
3. மேலோட்ட காற்றற்ற கழிவுத்தடுப்பு.
4. **Asmex** எனப்படும் மென்தகட்டு தொழில்நுட்பமுறை.
5. காற்றற்ற திரவ அடிநிலைத் தாக்கி.
6. வளைய அதி ஊதாக்கதிர் வீச்சுத்தாங்கி.
7. கீழோட்ட நிலையின் படைத்தாக்கி.

நகரங்களில் செறிவான கழிவு நீர் அகற்றப்படும் வலைபோல் அந்த வடிகால்கள் மாசுக்களைக் கட்டுப்படுத்தும்.

### கழிவு நீர் மாசுக்கள் அளத்தல்

1. காற்றில் தொங்கலான பதார்த்தங்கள் (**SPM**) நிறுத்தல்



முறையில் அளக்கப்படும்.

2. கந்தகவீரொட்சைட்டு அமிலமய அளத்தல் முறையால் செறிவு காணப்படும்.
3. காபன் மொனெக்சைட்டு செந்நிற கதிர்ப்பு உறிஞ்சல் மூலம் அளக்கப்படும்.
4. நீரற்ற அக்ரிடைன் முறைப்படி ஓசோன் அளக்கப்படும்.
5. நைதரசன் ஒட்சைட்டுக்கள் அளவு காட்டிக் குழாய்கள் மூலம் அளக்கப்படும்.

இந்த வகையான தொழில்நுட்பத்தை மக்களிடம் செல்லுபடியாகச் செய்ய முகாமைத்துவ நிர்வாக முறைகள் பெரிதும் பயன்படும்.

### முகாமைத்துவ அணுகு முறை

"கழிவுகள் சிக்கனப்படுத்தல்" என்பதுடன் தொடர்புடையதே முகாமைத்துவ முறை, உள்ளீடு, மனிதவளம், சக்தி என்ற மூன்று முக்கிய பதங்களைக் கையாள விஞ்ஞான முகாமைத்துவம் (**Scientific management**) வழிவகுப்பதுடன், பின்வரும் நடைமுறைகள் சேர்ந்து காணப்படுகிறது.



1. தூய தொழில்நுட்ப கருத்தை அறிதல், ஏற்றுக்கொள்ளல்.
2. உள்ளீடு, சக்தி, மனிதவளம் சிக்கனப்படுத்தல்.
3. தனியாளரின் கண்டுபிடிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
4. உள்ளும், புறமும் சுமுகமான சூழலைப் பேணல்.

### நிர்வாவாக அணுகுமுறை

தூய தொழில்நுட்ப அமுல்படுத்தல் நடைமுறைகளிலுள்ள நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்தல். அதாவது, சட்டச் சூழலுக்கு (**Legal environment**) இணங்கிப் போதல். சில முக்கிய செயல் முறைகளாவன.

1. தூய தொழில்நுட்பத்துக்கு முன்னுரிமை வழங்கல்.
2. சூழலியள்ளாளர்களைக் கொள்கைத் திட்டமிடலில் ஈடுபடுத்தல்.
3. கழிவு முகாமைத்துவ நிறுவனங்களை நிறுவுதல்.
4. தனியார் நிறுவனங்களும், அரச நிறுவனங்களும் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்தல்.
5. தூய தொழில்நுட்ப விரிவாக்க அலுவலகங்களை அமைத்தல்.
6. திட்டமிட்ட இயந்திர விற்பனை நிலையங்களும், திருத்தும் நிலையங்களும் அமைத்தல்.
7. வழிகோல் இயந்திர வடிவமைப்புச் (**Pilot plant**) செய்தல்.
8. தூய தொழில்நுட்ப துண்டுப் பிரசுரங்கள் (**Operational Tools**) தொடர்ந்து வெளிவிடல்.

சக்தி, மனிதவளம் என்பவற்றுடன் சேர்த்து தொழில்நுட்பம், கழிவுமுகாமைத்துவத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதால் - சிறப்பான உற்பத்தி, நவீன உற்பத்தி, மாற்று உற்பத்தி என்பவற்றை இலகுவாக அடையமுடியும். எனவே, தூய தொழில்நுட்பம் வளர, விஞ்ஞான முகாமைத்துவம் இன்றியமையாதது.

**பொன்னையா ஆழ்வாப்பிள்ளை**
**தகவல் தொடர்பு மையம் (மாணவர் பகுதி)**
**விவசாயபீடம், யாழ்ப்பாணம்.**

---

5 ஆம் பக்கம் பார்க்க............

ஆனால், இன்று தேர்தல் முடிவுகள், பரீட்சை முடிவுகள், பங்குச்சந்தை நிலவரங்களை உடனுக்குடன் அறியக்கூடியதாகவுள்ளது.

இதுவரையிலும் இலங்கையின் பயனுள்ள இணையத் தளங்கள் பற்றிப் பார்த்த நாம், இனிப் பார்க்கப்போவது இணையத்தின் புதிய வரவான "**Internet - 2**" என்பதாகும். "**INTERNET - 2**" என்பது இன்றைக்குள்ள இணைய வசதிகளுடன், மேலும் பற்பல புதிய வசதிகளையும், சேவைகளையும் உள்ளடக்கியதொன்றாகும்.

பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் மற்றும் அரசதுறை ஆகியவற்றின் ஒத்துழைப்போடு, ஏற்கனவேயுள்ள இணையத்தின் தரத்தை உயர்த்துவதே இந்தப் புதிய நுட்பத்தின் நோக்கமாகும்.

"**INTERNET - 2**" மூலம் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பல்வேறு விதமான "ஒலி - ஒ[illegible]" தகவல்களை உள்ளடக்கிய **digital** நூலகங்கள் உருவாக்கப்படும். 24 மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படுத்தக்கூடிய இந்த நூலகங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும். தலை சிறந்து விளங்கும் 100 பல்கலைக்கழகங்கள் இந்த **digital** நூலகங்களைத் திறப்பதனால், கல்லூரி மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் தத்தமது தேவைகளை **digital** நூலக **database** இலிருந்தே பெறக்கூடியதாயிருக்கும்.

இன்னும் சில ஆண்டுகளில் வரவிருக்கும் இந்த **INTERNET - 2** வை, முதன்முதலில் **U.S.A** நிறுவனங் களே பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். இருந்தாலும், எதிர் காலத்தில் அனைத்து **Internet** பாவனையாளர்களுக்கும் சாத்தியமாகும் ஒன்றாகும்.

எது எப்படியிருந் தாலும், **Internet - 2** பாவனைக்கு வரும் போது, தற்போதுள்ள **Internet** பயன்பாட்டிலுள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு, தெளிவான படங்கள், தெளிவான குரல்கள், துல்லியமான வேகம் என்பவற்றில் மாபெரும் புரட்சியோடு வருமென எதிர்பார்க்கலாம்.

இனிவரும் காலங்களில் "**Internet Cafe**" என்ற பெயர்கள் அற்றுப்போய் "**Internet - 2 Cafe**" என்ற பெயர்களே இணையச் சேவை வழங்குநர்களின் பெயர்ப் பலகைகளில் பிரகாசிக்கப் போகின்றன.

இவ்வாறாகப் பல்வேறு விடயங்கள் இணையத்தில் உள்ளதால், இணையத்தினுள் இணையப்போகும் அனைவரும், இணையக் குப்பைகளைத் தவிர்த்துவிட்டு, அன்னம் போன்று (நீரிலிருந்து பாலைப் பிரித்து உண்ணுதல்) அறிவுடன் செயற்படுதல்வேண்டும்.

சிறுவர்களைப் பொறுத்தவரை இணையச்சேவை வழங்கும் (**Internet Cafe**) நிறுவனங்களும், காசுக்கு முதன்மை கொடுத்துக் குப்பைகளைக் கிழறவிடாது, கலாசாரத்தைப் பேணுமுகமாக **Filter Program** களைப் பயன்படுத்தி, நல்ல விடயங்களைக் கற்க வழிகாட்ட வேண்டும். அத்துடன், பெற்றோர்களும், தமது பிள்ளைகள் தொடர்பாக விழிப்பாக இருத்தல் வேண்டும்.

இளைஞர்களே நீங்கள் இணையத்தில் இணைவதனூடாக, இன்றைய நாளையும், இனி வரப்போகும் நாளையும் இனிதே வளம்படுத்திக் கொள்ளுங்கள். (*முற்றும்*)

**எஸ்.ஜெயானந்தன்**
**விரிவுரையாளர் (வருகை),**
**யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை உடைய செயல்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# நெருக்கடிகளுக்கிடையே ரணில் அரசு...

சிறிலங்காவில் இப்போது ஆளும் ரணிலின் ஆட்சிக்கு இது நெருக்கடியான காலமென்றே கூறவேண்டும்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, ஆட்சி நிர்வாகத்தில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்றே மக்களின் எதிர்பார்ப்பு இருந்து.

புதிய அரசு பதவி ஏற்கும் என்பது உறுதியானது என்ற நம்பிக்கை வலுப்பெற்றதையடுத்து விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த போர்நிறுத்தத்தை அடுத்து ஒரு சமாதான சூழல் உருவாகுவதற்கான தளத்திற்கு இறுக்கமான அத்திவாரம் இடப்பட்டது.

அரசு புலிகளின் சமாதான சமிக்கைகளை சாதமாக பரிசிலிக்கத் தொடங்கியதையடுத்து, நோர்வே நாட்டின் சமாதான ஏற்பாட்டாளர்களின் அனுசரணையுடன் நடைபெற்ற பேச்சுக்களை தொடர்ந்து புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டது.

இது தென்னிலங்கை அரசியல் திடீர் திருப்பங்களை உருவாக்க சமாதான நகர்வுகள் முன்னெடுக்கப்படத் தொடங்கின. சமாதான நகர்வுகளில் நம்பிக்கையூட்டும் ஆரம்பகட்டங்கள் அரசின் மீதான நம்பிக்கையை பெருமளிவிற்கு உயர்த்த வழிவகுத்ததையடுத்து, எதிர்க்கட்சிகளுக்கு குழப்பமும், திகிலும் தமது அரசியல் எதிர்காலம் குறித்து சந்தேகங்கள் எழ ஆரம்பித்தன.

ஒருவகையில் சமாதானம் என்பது சிங்கள அரசியல் வாதிகளுக்கு ஒவ்வாமைதரும் சொல்லாக இருந்தாலும், மக்களிடையே அதுவும், தென்பகுதிமக்களிடையே சமாதானத்தின் தேவை கணிசமாக உணரப்பட்டது. சமாதனத்திற்கான மக்களின் ஆதரவும், சர்வதேச சமூகத்தின் ஆதரவும்,ரணில் அரசுக்கு பின்பலமாக ...அவரது ஆட்சியின் முதல் ஆண்டு வலிமையானதொன்றாகவே விளங்கியது.

ரணில் அரசு சமாதான முன்னெடுப்புக்களை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும். விசுவாசமான நோக்குடன் மேற்கொண்டதோ இல்லையோ, ஆனால், அதனை அரசை வலுப்படுத்தவும், சர்வதேச ஆதரவையும் சர்வதேச நிதிவளங்களைப் பெற்றுக்கொள்ளவும் நன்கு பயன்படுத்த முடிந்தது என்றே கூறவேண்டும். சமாதான நகர்வுகளை நம்பிக்கைக்குரிய விடயமாக பிரசாரம் செய்து கொண்டே ரணில் அரசு தனது ஆட்சிக்காலத்தை வெற்றிகரமாகக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்டது என்னவோ உண்மைதான்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் சாதாரண அம்சங்களையே நடைமுறைப்படுத்தும் திராணியற்ற அரசாங்கம் சமாதானம் என்ற ஒரு சொல்லைப் பயன்படுத்திக் கொண்டே காலம் கடத்த முனைய, எதிர்க்கட்சிகளோ அதே சமாதானம் என்ற சொல்லை வேறு வகையில் அர்த்தப்படுத்தி, ரணிலின் சமாதான முன்னெடுப்புக்களை சிறிலங்கா அரசின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எதிரான விடயமாகவே பிரசாரம் செய்வதில் பரந்த அளவில் வெற்றிபெறத்தொடங்கின.

பொ.ஐ.முன்னணி ஜே.வி.பி., சிஹல உறுமய, பிக்குகள் பெரமுன எனப் பேரினவாதக் கட்சிகள் பலவும் இந்த நடவடிக்கையை பன்முகப்பட்ட போக்கில் சிங்கள மக்களுக்கும், பௌத்த சமயத்துக்கு எதிரானதாகவும், ஆபத்தானதாகவும் கருத்தியல் ரீதியில் பல்வேறுபட்ட வடிவங்களில் பிரசாரம் செய்யத் தொடங்கியதையடுத்து, அரசு மெல்லமெல்ல நெருக்கடிகளைச் சந்திக்கத் தொடங்கியது.

ஒருபுறம் கூட்டங்கள், பேரணிகள், அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் என அரசியல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்த எதிர்க்கட்சிகள் அரசுக்கு மேலும் அழுத்தங்களை கொடுக்கும் வகையில் தொழிற்சங்க ரீதியிலான நடவடிக்கைகளையும் தொடரத் தொடங்கியுள்ளன.

ஆஸ்பத்திரி ஊழியர் வேலைநிறுத்தம், தனியார் பஸ் ஊழியர் வேலைநிறுத்தம் என ஆரம்பித்த இந்த வகையான போராட்டங்கள் ஒன்று முடிய இன்னொன்றாக சங்கிலித் தொடராகத் தொடரத் தொடங்கியுள்ளது.

கொஞ்ச நாட்களாக பெரும் பாதிப்பினை மக்களுக்கு ஏற்படுத்திய ஆஸ்பத்தி ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஒருவாறாக முடிந்துவரும் நிலையில் ரயில்வே ஊழியரின் வேலைநிறுத்தம் ஆம்பமாகப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது உண்மையில் நன்கு திட்டமிடப்பட்ட அரசின் மீது மக்களுக்கு அதிருப்தியும், நம்பிக்கையீனமும் வெறுப்பும் ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கையே ஆகும்.

அரசுக்கு எதிரான மக்களின் வெறுப்பானது தமது இயல்பு வாழ்வானது வேலைநிறுத்தம் போன்ற நடவடிக்கையால், சிதைவுறுவதன் காரணமாக ஏற்படுவதுடன் எதிர்க்கட்சிகளின் பிரசார நடவடிக்கைகள் பேரணிகள், பாதயாத்திரை போன்வற்றால் அரசு சிங்கள பௌத்த இனத்திற்கும், சிறிலங்காவுக்கும் ஒன்றாக மாறிவருகிறது என்ற உணர்வுடன் தீவிரமடையும் நிலையும் உருவாகிவருகிறது.

இது அரசுக்குப் பெரும் நெருக்கடிகளை பன்முகப்படுத்தப்பட்ட வகையில் ஏற்படுத்துவதுடன், அரசின் ஸ்திரத்தன்மையின் பலமற்ற தன்மையை மேலும் பலவீனப்படுத்தவும் தொடங்கியுள்ளது.

இதேவேளை ரணில் அரசின் சமதான நகர்வுகளின் விசுவாசமற்ற நேர்மையற்ற காலம் கடத்திப் பிரச்சினைகளின் போக்கை திசைதிருப்பும் தன்மை வெளிப்படையாகவே தமிழ் மக்களுக்கு புரியஆரம்பித்திருப்பதால், அவர்களும் அரசின் மீதான நம்பிக்கையை முற்றாக இழக்கும் அபாயம் உருவாகி வருகிறது.

எல்லாவகையிலும் ரணில் அரசு ஒரு பன்முகத் தாக்குதல் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கத் திணறும் நிலையுருவாகி வருவதாகவே தெரிகிறது.

## நாடும் நடப்பும்



செய்தி: யாழ்.-கொழும்பு பல்கலைக்கழக மாணவர் மோதல்களில் வெளியார் பங்கேற்பு...

# பாடசாலை செல்லாத சிறுவர்களின் விபரங்கள் திருகோணமலையில் திரட்டு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து ஐந்து வயது தொடக்கம் 15 வயதுவரை இடைவிலகிய மாணவர்களதும், இந்த வயதிற்குள் பாடசாலை செல்லாத சிறுவர்களதும் விபரங்களை, ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் நிறுவனம் திரட்டி வருகின்றது.

இதன் முதலாவது வேலைத்திட்டம் - அண்மையில் தம்பலகாமத்தில் நடைபெற்றது. இரண்டாவது வேலைத திட்டம் - கந்தளாய் கல்வி வலயத்திலுள்ள சேருவில பிரதேசத்தில் நடைபெற்றது. இதன் மூன்றாவது வேலைத்திட்டம் - கடந்த திங்கட்கிழமை மூதூர் கல்வி வலயத்திலுள்ள ஈச்சிலம்பற்றையில் நடைபெற்றது.

இந்த வேலைத்திட்டங்கள் திருகோணமலை மாவட்ட யுனிசெப்பின் இணைப்பாளர் கபிரியலா எல் றோய் தலைமையில் நடைபெறுகிறது. இதன்படி, கல்வித் திணைக்களங்களைச் சேர்ந்தோர் மற்றும் அரச அதிகாரிகள் போன்றோர் மகளின் வீடுகளுக்குச் சென்று, இந்த மாணவர்களின் விபரங்களைத் திரட்டுவதுடன், இவர்கள் என்ன காரணங்களுக்காகப் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என்ற விபரங்களையும் திரட்டுகின்றனர்.

இவ்வாறு, திரட்டப்படும் விபரங்களை யுனிசெப் நிறுவனம் பகுப்பாய்வு செய்து, இந்த மாணவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதனூடாக, இடைவிலகிய மாணவர்களதும், பாடசாலை செல்லாதவர்களதும், கல்வியைத் தொடர வாய்ப்பளிக்கின்றது. (04)

# திருகோணமலையில் இலவச மருத்துவ முகாம்

திருகோணமலை மாவட்டத்தின் மூன்றாம் கட்டைப் பகுதியில் - அமெரிக்கன்மிஷன் நிறுவனத்தினரால் இலவச மருத்துவமுகாம் ஒன்று நடத்தப்பட்டுவருகின்றது.

கடந்த ஞாயிறு முதல் எதிர்வரும் சனிக்கிழமைவரை நடைபெறும் இந்த மருத்துவமுகாமில், 40 வைத்தியர்கள் - வைத்திய சேவையினை மேற்கொண்டுவருகின்றனர்.

இங்கு சகலவிதமான சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், கூடுதலாக கண், பல் நோய்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. கண்பரிசோதனை மேற்கொண்டு, பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளும் இவர்களால் வழங்கப்படுகின்றது. அத்துடன், இங்கு சிறிய சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மருத்துவசேவை நிறைவடைந்தாலும், நோயாளர்களுக்கான மாதாந்தம் நடைபெறும் கிளினிக்குகளை தாம் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளதாக இந்த மருத்துவமுகாமினை ஒழுங்கமைத்துள்ள அமெரிக்கன்மிஷனைச் சேர்ந்த ஜெபநேசன் அடிகளார் தெரிவித்தார். (04)

# அம்பாறையில் தமிழ்—முஸ்லிம் பிணக்கு விடுதலைப் புலிகளால் தீர்த்துவைப்பு!

அம்பாறை - அக்கரைப்பற்று கடற்கரையில் அண்மையில் கரையொதுங்கிய முஸ்லிம் இளைஞரான ஜிவ்றியின் சடலம், விபத்து மரணம் இல்லையெனத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளினால் தாவுத் பஸ்மீர் என்ற இளைஞர் மீது மேற்கொண்ட விசாரணை மூலமே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மேற்படி நபர் தெரிவிக்கையில், ஜிவ்றி இறந்த அன்றைய தினம் - தான் கடற்கரைப்பக்கம் சென்றபோது, அவரை இரண்டு பேர் கைகளையும் கால்களையும் கட்டியபடி இழுத்துக்கொண்டு சென்றதாகவும், இதன்பின் இறந்த நபர் கத்தும் சத்தம் பலமாகக் கேட்டபோது, சற்றுநேரத்தின் பின் - தான் சென்று பார்த்தபோது, ஜிவ்றி இறந்து கிடந்ததாகத் தெரிவித்தார்.

இந்த நபரை விடுதலைப் புலிகள் அக்கரைப்பற்றிலுள்ள முஸ்லிம் பிரமுகரிடம் கடந்த திங்கட்கிழமை ஒப்படைத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்தச் செயலினை அக்கரைப் பற்றிலுள்ள முஸ்லிம் மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.(07)

## பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களை

# ஜனாதிபதி சந்திரிகாவினால் கட்டுப்படுத்த முடியாத நிலை!

(கொழும்பு)

..பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டுத் தொடர்பான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த நிலையில், ஜனாதிபதி சந்திரிகாவினால் கட்சியினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பியினர் நடத்திய- கண்டியிலிருந்து ஆரம்பமான பேரணியில் - பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கலந்து கொண்டனர். ஆனால், இதை ஜனாதிபதி விரும்பவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருக்கும், சிலர் ஜே.வி.பியுடனான கூட்டுத் தொடர்பாக மிகுந்த ஆர்வமுடையவர்களாக இருந்தனர்.

ஆனால், ஜே.வி.பியுடனான கூட்டு முறிவடைந்துள்ளநிலையில், மீண்டும் ஜே.வி.பியுடன் இணைவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள சிலர் முயற்சி எடுத்துவருகிறார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதைவிட, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், சுதந்திரக்கட்சிக்கும் ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணமே அதிகம் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஜே.வி.பியுடன் கூட்டமைத்து அடுத்துவரும் தேர்தல்களில் வெற்றி பெற்று, அரசு அமைப்பதையே பொதுஜன ஐக்கிய முன்னணியில் சிலர் நாட்டம் கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய செயற்பாடுகள் காரணமாகவே ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டினை கட்சிக்குள் இழந்து வருவதாகக் கூறப்படுகிறது.

# உலக உணவு திட்டத்தின் பயிற்சி கருத்தரங்கு!


உலக உணவு திட்டத்தின் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று- கடந்த வியாழக்கிழமை கண்டாவளைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் உலக உணவுத் திட்டப் பொறியியலாளரும், வடபகுதி இணைப்பாளருமான குலோத்துங்கம் - உலக உணவு வேலைத் திட்டம் பற்றி சிறப்புரையாற்றினார்.

இதில், கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் சங்கங்கள், கமக்கார அமைப்புகள், சனசமூக நிலையங்களைச் சேர்ந்த பெருமளவு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புலிகள் மீதான தடையை அகற்ற சர்வதேச நாடுகள் தயாராக வேண்டும்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்குமிடையே - சமாதானப் பேச்சுவார்த்தைகள் எப்போது மீண்டும் ஆரம்பமாகும் என்ற எதிர்பார்ப்பும், வினாவும் சகல மட்டங்களிலும் எழுந்திருப்பதை நாம் இப்போது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கடந்த ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பின்னரும், தமிழீழ மக்களுக்கு உருப்படியான பலனேதும் கிடைக்கவில்லை என்பதை - எல்லோரும் ஒப்புக்கொள்ளவும் செய்கிறார்கள். முறையான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு



ஒன்றினை உருவாக்குவதன்மூலம், தமிழீழ மக்களின் அன்றாட வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்து, பொருளாதாரக் கட்டமைப்பினை முறையாக உருவாக்கவேண்டும் என்பதையும் சமாதான விரும்பிகள் ஒப்புக்கொள்கிறார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் சரியான முறையில் நடைபெற்று, முறையான தீர்வு ஒன்றை அடைவதற்கு நாளாகலாம்.. அந்த இடைக்காலத்தில், தமிழீழ மக்களின் வாழ்க்கை முற்றாக இயல்புநிலைக்குத் திரும்புவதற்குரிய செயற்பாடுகளை ஆரம்பிப்பது அவசியமான தொன்றாகும். முறையான ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படுவது, சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளிப்பதற்கு இன்றியமையாத விடயமாகும்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக, அரச பயங்கரவாதப் போர்களுக்கு முகம்கொடுத்து, இன்னல் நிறைந்த நாளாந்த வாழ்க்கையை நடத்தி வருகின்ற தமிழினம் - இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கியதன் பலனை எதிர்நோக்கியிருப்பதில் வியப்பொன்றுமில்லை. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்ததற்கான பலனை, சிங்கள தேசம் அறுவடை செய்யத் தொடங்கிவிட்டது. ஆனால், தமிழர் தேசமோ- சமாதானச் சூழ்நிலைக்கான பலனை, பயனை இன்னமும் அனுபவிக்கமுடியாத நிலையையே நாம் காணக்கூடியதாகவுள்ளது.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து, தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பிக்கவிருக்கும் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொண்டு, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருபது மாதங்கள் ஆகப்போகிற நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி, பன்னிரெண்டு மாதங்கள் ஆகிவிட்டநிலையில்- தமிழீழ மக்கள் தர்மத்தை எதிர்பார்த்து நிற்பது வியப்பிற்குரிய விடயமல்ல.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போதும், அதிகாரப்பகிர்வின்போதும், இரு தரப்பினரும் அதாவது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும், அரசும் - சம பங்காளிகளாகச் செயற்பட வேண்டும் என்பதை, அமெரிக்கா உட்பட, சகல உலக நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளதோடு, இந்தக் கருத்தை வெளிபபடையாகவும் சொல்லி வருவதை நாம் காண்கிறோம். தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசும் சமபங்காளிகளாக விளங்கி, இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துசசெல்லும் பட்சத்தில் - தங்களது ஆதரவும், அனுசரணையும் அந்த இரு தரப்பினருக்குமுண்டு என்பதை, அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் கூறியும் வருகின்றன.

ஆனால், இந்த விடயத்தில் இந்த உலக நாடுகள் சொல்லி வருவதை, அவர்களது செயற்பாடுகள் நிரூபிப்பதாக இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசும் சமபங்காளிகளாகச் செயற்பட வேண்டும் என்பதற்காக, அரசு - தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதித்திருந்த தடையை அகற்றியதை நாம் அறிவோம். தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பயங்கரவாதத் தடையை, அரசு அகற்றாவிட்டால், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தாம் பங்குபற்றப்போவதில்லை என்று, தமிழீழத் தேசியத் தலைவர் - தமது சர்வதேச ஊடகவியலாளர் மகாநாட்டின்போது தெட்டத்தெளிவாகத் தெரி வித்திருந்தார். அதற்கிணங்க, அரசு - தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிய பின்னர், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

இன்று சமாதானப் பேச்சுக்களின்மூலம், இரு தரப்பினரும் சரியான தீர்வினை அடைய வேண்டும் என்று - அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, ஜப்பான், நோர்வே என்று பல உலக நாடுகளும் கருத்து வெளியிட்டு வருவதோடு மட்டுமல்லாது, இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதற்கு உதவுவதற்காக, ஏராளமான நிதியுதவிகளையும் தருவதற்கும் முன்வந்துள்ளன.

அதாவது, இந்த உலக நாடுகள் - சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாகத் தீர்வு காண வேண்டும் என்ற கருத்தை வெளியிடுகின்றன. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் - அரசும், விடுதலைப் புலிகளும் சமபங்காளிகளாக இருக்கவேண்டுமென்றும் தெரிவிக்கின்றன. அதன் பொருட்டு, ஏராளமான நிதியுதவிகளையும் தருவதாக உற்சாகப்படுத்துகின்றன. இதன்மூலம் இந்தச் சமாதானத்தீர்வு விடயத்தில், தாம் நடுநிலையாக, பாரபட்சம் இல்லாது செயல்படுவதுபோன்ற ஒரு தோற்றத்தை, அமெரிக்கா உள்ளிட்ட பல உலக நாடுகள் ஏற்படுத்தி வருகின்றன.

ஆனால், அதுதான் உண்மையா? அதில் எமக்கு நியாயமான சந்தேகம் உண்டு.

இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, சிங்கள தேசத்தின் நலனும், தமிழர் தேசத்தின் நலனும் சரிசமமாகச் சீர்தூக்கிக் கவனிக்கப்படுவதாக இவர்கள் சொன்னது உணமையென்றால், இந்த இரண்டு தரப்பையும் நாம் சமமாகவே மதிக்கிறோம் என்று, இவர்கள் வெளிக்காட்டிக்கொள்வது உண்மையென்றால், இந்த இரண்டு தரப்பின் நலனுக்கும், நாம் பாரபட்சம் இல்லாது ஆதரவு அளிப்போம் என்று, இவர்கள் காட்டிக்கொள்கின்ற தோற்றம் உண்மையென்றால், சிங்களவர்களைப் போன்றே தமிழர்களுக்கும் உரிமையுண்டு. அது சமவுரிமை என்று, இவாகள் பரிந்துரைப்பதும் உண்மையென்றால், அந்தப் பாரபட்சமற்ற தன்மையை - இந்த உலக நாடுகள் தங்கள் செயல்மூலம் காட்டவேண்டும்.

ஓர் இனம் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அதனுடைய அகிம்சை வழிப்போராட்டங்கள் தடுக்கப்பட்டு, அதன்மீது வன்முறைப் போராட்டம் திணிக்கப்பட்டபோது - தன் இனத்தை, தன் மொழியை, இதன் மண்ணைக் காப்பாற்றுவதற்காக, ஆயுதம் தாங்கிய ஓர் இனத்தின் பிரதிநிதிகளைச் சமாதானக் காலமாகிய இந்த வேளையிலும் - பயங்கரவாதிகள் என்று பட்டியலிட்டு வைத்திருப்பது, இந்த உலக நாடுகளின் உள்நோக்கத்தைச் சந்தேகத்திற்கு உள்ளாக்குகிறது.

சிங்கள அரச பயங்கரவாதத்தினால் தமிழினம் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, தமிழருக்காக எந்தக் குரலும் எழுப்பாதவர்கள், இலட்சக்கணக்கில் தமிழர்கள் இடம் பெயர்ந்தபோது, ஓர் ஆறுதல் வார்த்தையும் சொல்லாதவர்கள், இரண்டு தசாப்த காலமாக ஈழத்தமிழினம் மீது மாறி மாறி வந்த சிங்கள அரசுகள்- அரசபயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட போதும், கண்ணீர் விடாதவர்கள்- இன்று தமிழினம் போர் எழுச்சி கொண்டு - அதுவே போர் எழுச்சியாக பொங்கி எழுந்து, தன்னைத் தானே தற்காத்துக் கொண்டபோது மட்டும், சமாதானக் காவலர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்வதை நாம் காண்கின்றோம்.

அலை அலையாக பெருவெற்றிகளைக் கண்டபோதும், சமாதானத்தின்மூலம் தமது தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று, தமிழ்த் தேசியத் தலைமை தனது சமாதானக்கரத்தை நீட்டியது. சமாதானத் தீர்விற்கான அழைப்பினை - தமிழீழத் தேசியத தலைமை பல காலமாகவே விடுத்தும் வந்துள்ளது. இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதம் தாங்கிய போராட்டம் பெற்றெடுத்த வெற்றிகள்தான் இந்த சமாதானத்திற்கான காலத்தை உருவாக்கியுமுள்ளது.

இந்தவேளையில், அமெரிக்கா போன்ற நாடுகள் - தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கம் என்று பட்டியலிட்டு தடை செய்திருப்பது - ஒட்டுமொத்த ஈழத்தமிழினத்தையே அவமானப்படுத்த முயல்கின்ற செயலாகும்.

போரினை நிறுத்தி, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டு, சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் கலந்துகொண்டிருந்த விடுதலைப்புலிகள் மீதான இந்தத் தடை, பொருத்தமில்லாத ஒன்றுமட்டுமல்ல, சமாதானப் பாதைக்கும் ஏற்பட்ட தடையுமாகும்.

மிகச்சிறந்த நாடுகளில் ஒன்றாகவும், கருத்துச் சுதந்திரமிக்க நாடாகவும் கருதப்படும் அமெரிக்க நாட்டில், கம்யூனிஸ சிந்தனைகளுக்கும், செயல்பாடுகளுக்கும் தடை உண்டு. கம்யூனிஸ சித்தாந்தங்களை- அமெரிக்கா வெளிப்படையாக எதிர்த்தும் வருகின்றது. இன்று இலங்கைத்தீவில் சமாதானம் வரக்கூடாது என்று ஜே.வி.பி. கிளர்ச்சிப் போராட்டங்களை நடத்தி வருகின்றது. ஜே.வி.பி. இயக்கம் தன்னை ஒரு மார்க்ஸிய கம்யூனிஸ்ட் இயக்கமாகவே வெளிக்காட்டி வருகி றது. அந்த ஜே.வி.பி. கட்சியுடன் கைகோர்த் துக்கொண்டு, சமாதானத்தைக் கவிழ்ப்பதற்காக இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். சமாதானத்திற்கு எதிரான இந்தச் செயற்பாடுகளை, அமெரிக்கா கண்டும் காணாதவாறு நடந்துகொள்வது அமெரிக்காவிற்குப் பெருமை சேர்க்கும் விடயமல்ல. அமெரிக்காவின் அழுத்தம் - இவர்கள் மீதுதான் அமையவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசியல் அழுத்தங்களைக் கொடுப்பதாக எண்ணிக்கொண்டு, நியாயமில்லாத அறிக்கைகளையும், அழுத்தங்களையும் அமெரிக்கா கொடுக்க நினைப்பது, இந்த சமாதான முயற்சிக்கு உதவுவதாக இருக்காது. நேர்மையற்ற அழுத்தங்களுக்கு விடுதலைப் புலிகள் பணிந்து கொடுப்பார்கள் என்று எண்ணுவதும் மடத்தனமாகும். இலங்கைத்தீவில் உண்மையான சமாதானம் நிலவவேண்டும். தமிழ் மக்களுக்கு உரிய கௌரவமும், உரிமையும் வழங்கப்பட வேண்டுமென்று இந்த உலக நாடுகள் எண்ணுவது உண்மையென்றால், அதற்குரிய நடவடிக்கைகளை இவர்கள் எடுக்கவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையைச் சம்பந்தப்பட்ட நாடுகள் விலக்கிக்கொள்ள்வேண்டும். அரசையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் நாம் சமபங்காளிகளாகக் கருதுகின்றோம் என்று இவர்கள் சொல்வதைச் செயலிலும் காட்ட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீகுவதன்மூலம், உண்மையாண சமாதானத் தீர்வினை அடைவதற்கு சம்பந்தப்பட்ட இந்த நாடுகள் உண்மையாகவே அக்கறை கொண்டுள்ளன என்பதை நிரூபிக்க வேண்டும். இதுவே தமிழ் மக்களுக்கு இவர்கள் தரக்கூடிய முதல் மரியாதையாகும்.

**மெல்பேனிலிருந்து சபேசன்**

# சேதமடைந்துள்ள நெடுந்தீவு வாடிவீட்டை திருத்த அதிகாரிகள் முன்வருவார்களா?





நெடுந்தீவுப் பிரதேசம் - ஏனைய தீவுகளைவிட தொலைவில் இருந்தாலும், இத்தீவானது - உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய வரலாற்றுச் சின்னங்களையும், கடற்கரை அமைப்பினையும் கொண்ட ஓர் அழகிய தீவென்பது - இங்கு வந்துசென்றவர்களுக்குப் புரிந்திருக்கும்.

அந்தவகையிலே, கடந்த இரு தசாப்தகாலத்துக்கு முன்னர், வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வந்து சென்றதும், அவர்கள் தங்கி நிற்பதற்கான அரசுக்குச் சொந்தமான வாடிவீடு ஒன்று இருந்தது. நெடுந்தீவு மாவிலித்துறைமுகத்திலே வனப்புடன் வரவேற்று, உபசரித்ததும் - வாடி வீட்டில் நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவரே இருந்து, உணவுகள் சமைத்து வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் - நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக, உல்லாசப் பயணிகளின் வருகை முற்றாக முடங்கி விடவும், அதனால் வாடிவீடு கொஞ்சம் கொஞ்சமாக அதன் செயற்பாட்டினை இழந்தது. அதனால், அதனது எழிலை இழந்து, கவனிப்பின்றி, ஓர் அநாதைபோல அனைவராலும் கைவிடப்பட்டுள்ளது.

ஆனால், கைவிடப்பட்ட கட்டடத்தின் ஓடுகள், மரங்கள், மதிற்கற்கள் என்பவை நாளும் பொழுதுமாகக் குறைந்துகொண்டே செல்கிறது.

இந்தக் கட்டடம் - கால்நடைகள் படுத்துறங்கவே பயன்படுகின்றது .

**செய்திக் கட்டுரை**

இந்தவகையில், இதனை இப்படியே விட்டுவிட்டால், எதிர்காலத்தில் வாடிவீடு ஒன்று இருந்ததென்பதே கேள்விக்குரிய தாகிவிடும்.

தற்போதைய சமாதானக் காலத்தில், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள், வெளிநாட்டிவர்கள் எல்லோரும் இங்கு வந்துசெல்லத் தொடங்கியுள்ளனர்.

அவர்களது ஏக்கமெல்லாம், தாம தங்கிநிற்க ஒரு இடமில்லை என்பது தான். இவ்வாறு வருபவர்கள்- தெரிந்தவர்களது வீடுகளிலோ அல்லது படகில் வரும்போது பழகிய பழக்கத்திலே - அவர்களின் வீடுகளிலோ தான் தங்கிச்செல்கின்றனர்.

நெடுந்தீவுக்கு "வந்தாரை வரவேற்று உபசரிக்கும்" பண்பொன்று உண்டு. அதனால், வாடிவீடு தேவையில்லை என அரச அதிகாரிகள் விட்டுவிட்டார்களோ தெரியவில்லை.

எனவே, நெடுந்தீவுக்கான உல்லாசப்பயணிகளின் வரவினை அதிகரிக்கவேண்டும் என்றால், அவசியமாகத் துறைமுகப் பகுதியிலுள்ள "வாடி வீடு" திருத்தப்படவேண்டும். இதனை எப்போது அதிகாரிகள் செய்வார்களோ தெரியவில்லை.

கடந்தகால அபிவிருத்திகளில் கூட, இதனை ஆட்சியாளர்கள் மறந்து விட்டார்கள்.

பெருமளவு நிதியினை எங்கெங்கோவெல்லாம் கொட்டிச் செலவு செய்தனர். ஆனால், இதனை எவரும் கண்டுகொள்ளாதிருக்கின்றனர்.

தற்போது நடைபெறும் அபிவிருத்திப் பணிகளில், இதற்கும் ஒரு முக்கிய இடம்கொடுத்து, புனரமைப்புச் செய்யவேண்டும்.

வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனத்தினரே இங்கு வரும்வேளையில், தங்க இடமின்றிப் பல அசௌகரியங்களை அனுபவித்துச் செல்வதுண்டு.

இந்தவகையில், அந்த நிறுவனங்களினூடாகவேனும் இப்புனரமைப்பை மேற்கொள்ள - அரச அதிகாரிகள் முன்வரவேண்டும்.

இதனால், உல்லாசப்பயணிகள் வருகைகூடி, நெடுந்தீவு மக்களின் வருமானம் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளது. எனவே, இதனைத் திருத்தம்செய்ய முயற்சிப்பார்களா அதிகாரிகள்.

**கண்ணன்**

❖

நமது ஈழநாட்டிற்கு எமது வாழ்த்துகள்

சாருகா நகை மாடம்
சிறந்த தரமான தங்கத்தில் மனங்கவர்
வண்ணங்களில் தங்க நகைத் தேவைகளைப்
பூர்த்திசெய்ய நாடுங்கள்
ராஜா தியேட்டர் எதிரில்



குறித்த நேரத்தில் கொடுக்கப்படும்

**சாருகா நகைமாடம்**
**172 A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1630)

நமது ஈழநாடு மேலும் வளர எமது வாழ்த்துக்கள்
உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்ய நாடவேண்டிய இடம்

**யாழ் உணவகம்**

NO.42 சத்திர சந்தி அருகாமையில்
அசைவ உணவுகட்கு
(ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்) (சி-1631)

இரண்டாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் நமது ஈழநாடு
மேலும் மெருகுடன் வெளிவர எமது வாழ்த்துக்கள்

தரமான இடத்தில் தரமான தொலைத்தொடர்பு சேவையை பெற்றுக்
கொள்ள நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்



**கனன் தொலைத்தொடர்பு நிலையம்**
**535, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்**



LOCAL & IDD T.P.021 - 222 3480
021 - 6580
(சி-1627)

## பொங்குதமிழ் ஏற்பாட்டு அலுவலகம் திறப்பு

மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு ஏற்பாட்டு அலுவலகம் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அமிர் தாப்பினால் திறந்துவைக்கப்பட்டது.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொங்குதமிழ் நிகழ்வு பற்றி கருத்துக்களை பொங்குதமிழ் நிர்வாகக் குழுவினர் ஒவ்வொரு கிராமம் கிராமமாமகச் சென்று பொது மக்களுக்கு விளக்கமளித்து வருகின்றனர்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய்,ரம்பா, குஷ்பு நடித்த
**மின்சாரக் கண்ணா**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**STRATEGIC COMMAND**
(சி-1618)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
சத்தியராஜ், விஜயலட்சுமி, நடித்த
**ராமச்சந்திரா**
நாளை முதல் பிரசாந், கிரண் நடித்த
**வின்னர்**
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30.
9.30 (பு.நே)
(சி-1619)

SCRIPTNET CHARITY Skill-sharing

# திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் நடிகர்களுக்கான பயிற்சிப் பட்டறை

இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்கிறிப்நெற் நிறுவனம் யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகுடன் இணைந்து யாழ்.மண்ணில் கடந்த வருடம் நடத்திய திரைக் கதை எழுத்தாளர்களுக்கான பயிற்சிநெறியைத் தொடர்ந்து இவ்வருடம் திரைப் படத்துறையைச் சார்ந்த ஆர்வமுள்ள அனைவருக்கும் திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர்களுக்கான பயிற்சிப் பட்டறையை நடத்த முன்வந்துள்ளது. இதில் 50 வயதிற்கு உட்பட்ட ஆர்வமுள்ள ஆண், பெண், சிறுவர்கள் கலந்து கொள்ளலாம்.

**காலம்: 2003 ஒக்ரோபர் 6 முதல் 17 வரை**
**இடம் : தொடர்பகம் 657/01 வைத்தியசாலை வீதி**
**(O.L.R. ஆலயம் முன்பாக) யாழ்ப்பாணம்.**

விண்ணப்பங்களை சுயவிவரக் கோவைகளுடன் 04.10.2003 சனிக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை தொடர்பக மண்டபத்திற்கு நேரில் வந்து தங்கள் வரவை உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்கவும்
(தபால் மூலமும் உறுதிப்படுத்தி பட்டறையில் பங்குபெறலாம்)

**யாழ்.திட்ட இணைப்பாளர்,**
**"ஸ்கிறிப்நெற்"**

(496)

# முக்கிய அறிவித்தல்

**யாழ் நகரில் டயலொக் G.S.M இன் ஏக விநியோகஸ்தர்கள்**



Dial Links
No.204, K.K.S Road
Jaffna.



| | | | |
|---|---|---|---|
| எம்மிடம் | Alcatel - 311 | - 10,950/= | இணைப்புடன் |
| | Sagem | - 7,450/= | (Sim Card) |

இரண்டுவருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
தனியாகவும், இணைப்புக்கள் (Sim Card) வழங்கப்படும்.

**குறிப்பு** 1.தற்போது கொழும்பு நகரில் தனி இணைப்புக்கள் வழங்கப்படுவதில்லை
2.எம்மிடம் இணைப்புப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், தமது தேசிய அடையாள அட்டையின் பிரதியை எம்மிடம் தருவதன் மூலம் அவர்களது பெயரிலேயே இணைப்பினைப் பெற்றுக்கொள்ளலாம்.

Kit Card 400/=
1000/=

**சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**



(சி-1626)



# ஊர்சுற்றி எழுதுவது

உலகமயமாக்கல் என்ற திட்டம் மிகப் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. நமது தாய்மொழிக் கல்விக்கே இதனால் ஆபத்து வந்துகொண்டிருக்கிறது என்று, பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராசா நேற்று நமது ஈழநாடு ஓராண்டு நிறைவையொட்டி நடந்த ஒரு சிறு நிகழ்ச்சியில் உரையாற்றும்போது எச்சரித்தார்.

உலகமயமாக்கலின் ஆபத்தான விளைவுகளைப் பற்றி ஊடகங்கள் மக்களுக்கு எடுத்துவிளக்கி மக்களைத் தட்டியெழுப்ப வேண்டுமென்று, யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பீடாதிபதி கலாநிதி சபா ஜெயராசா எடுத்துக்கூறினார்.

சில மாதங்களுக்கு முன்னரும் இந்த உலகமயமாக்கலின் ஆபத்து பற்றி ஒரு தமிழ்ப் பத்திரிகையில் இவர் நீண்டதொரு கட்டுரையொன்றை எழுதியிருந்ததை நான் பார்த்தேன்.

'பாய்ஸ்'(Boys) படத்தை இடைநிறுத்திவிட்டதற்காக அடிபிடியிலறங்குவதற்கு நமது 'பாய்ஸ்'களும் தயாராகிவிட்டதைப் பார்க்கும்போது புரிந்துணர்வு ஒப்பந்தமும், போர்நிறுத்தமும் இன்னும் கொஞ்சக் காலத்திற்கு தள்ளிப்போடப்பட்டிருக்கக்கூடாதா என்று ஒரு நண்பர் சொன்னார்.

தமிழ்நாட்டில் தாய்மொழிக் கல்வியை பற்றி யாரும் கவலைப்படவில்லை. அங்கு இப்பொழுது ஆங்கிலம் தான் வீட்டுமொழியாகிக் கொண்டுவருகிறது.

தாய் மொழியான தமிழ் போதனாமொழியாக இருக்கக்கூடாதா என்று, யாரோ தமிழ்நாட்டில் ஒரு நீதிமன்றத்தில் வழக்குப் போட்டதாகவும் நண்பர் சொன்னார்.

இந்தியாவில் தமிழ்மொழியையும் செம்மொழியாக பதினெட்டு மொழிகளில் ஒன்றாக அரசியல் சாசன ரீதியில் பிரகடனப்படுத்த வேண்டுமென்று, தமிழ் அறிஞர்கள் குழுவொன்று டில்லிவரை சென்று போராட முனைகின்றது.

தொலைக்காட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு தொடர் நாடகங்களை ஒளிபரப்பிக்கொண்டிருக்கின்றன. இந்த தொலைக்காட்சி நாடகங்களுக்கிடையில் மட்டுமல்லாது வாதப்பிரதிவாதங்கள் எந்த விதமான ஆங்கிலம் பேசுகின்றன என்பதிலும் போட்டி.

ஒரு நாடகத்தில் அமெரிக்காவிலிருந்து வரும் பாத்திரம் அமெரிக்கன் இங்கிலிஷ் பேசினால் மற்றொரு தொடர் நாடகத்தில் இங்கிலாந்திலிருந்து வரும் வெள்ளைக்காரனுடைய இங்கிலிஷ் பேசவைப்பதில் போட்டி.

வெள்ளைக்கார ஆட்சியைத் தானே, காந்தி -மகாத்மாவின் சுதந்திரப் போராட்டம் எதிர்த்தது. ஆங்கிலேயனின் ஆங்கிலத்தை எதிர்க்கவில்லையே என்று தமிழ் நாட்டிலுள்ள மெத்தப் படித்தவர்கள் விளக்கம் சொன்னாலும் சொல்வார்கள்.

தமிழ்த் திரைப்படங்கள் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் தமிழ் நாட்டில் பால் மோர் விற்பவர்களையும், கீரை விற்பவர்களையும் கூட இங்கிலிஷ் பேசச் செய்திருக்கிறது. பாராட்டவேண்டும்.

இந்த வியாதி நமது மண்ணில் தொற்றிவிடக்கூடாது. அறிவை விருத்தி செய்வதற்காக எத்தனை மொழிகளை வேண்டுமென்றாலும், அவற்றை ஒழுங்குமுறையாக் கற்றுப்பயன்பெறட்டும். அதில் தவறில்லை. ஆனால் எல்லாவற்றையும் கலந்து தமிழ்மொழியை கலக்கிவிடாமல் இருந்தால் போதும்.

இந்தவகையில் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே பாக்கு நீரிணையில் பாலம்போட வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைகளுக்கு ஜெயலலிதா எதிர்ப்புத் தெரிவித்தை வரவேற்கவேண்டும். கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் கப்பல் போக்குவரத்து கூட ஜெயலலிதா விரும்பவில்லை.

இதற்காக நாம் நமது மொழியின் பாதுகாப்பை உத்தேசித்து நன்றி சொல்லலாம். அது சரி. சிறிலங்கா அமைச்சர் மிலிந்த மொறகொடவைக் கூட ஜெயலலிதா சந்திக்க விரும்பவில்லையாமோ எதற்காக?

நமது ஈழநாடு மேலும் வளர எமது வாழ்த்துக்கள்

யாழ் நகரில் சிறந்த சீரான சிகை அலங்கரிப்பு தேவைகட்கு
அனுபவம் வாய்ந்த சிகை அலங்கரிப்பாளர்களால் விரும்பும்
விதத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ள

**சிற்றி BOY சலூன்**

NO,256, கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர் சசி
ஊழியர்கள்.
(சி-1629)

இரண்டாவது வருடத்தில் தடம் பதிக்கும் நமது
ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்

யாழ்.மண்ணிற்கு முதல் முதலில் மேசைத்
தொலைபேசியை அறிமுகப்படுத்திய பவர்செலுலர்
நிறுவனத்தினர் தமது சேவையை மேலும்
விரிவுபடுத்தியுள்ளனர்.
24 மணிநேரத்தில் பூட்டித் தரப்படும்.
காலம் பொன்னானது உங்கள் உறவுகளுடன்
உரையாடி மகிழ உடன் விஜயம் செய்யுங்கள்

**பவர்செலூர்**

உத்தரவாதம் உண்டு

**இல.185 1 ஆம் மாடி**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



ராஜா தியேட்டர் அருகாமையில்
T.P.071 - 2399220
FAX 0712 381125
Mobile 0777 - 242416
E-mail Power @ Cik.
(சி-1628)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

இன்னும் இரண்டாண்டுகளில் ஜனாதிபதி பதவியிழந்து வீட்டுக்குப் போய்விடுவார். அவர் மீண்டும் தேர்தலில் நிற்கமுடியாது? என்று அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அக்கா எப்ப போவா... கதிரை எப்ப காலியாகும் என்று அநுரா காத்திருப்பது தெரிந்தவிடயமே.

கட்சியின் தலைமை நாட்டின் தலைமை இரண்டையும் அவர் குறிவைத்து செயற்படுகிறார் என்பது அவர் சொல்லாமலே கூறும் செய்தியாகும்.

இரண்டு ஆண்டுகளில் அக்காவால் அவரது அதிகாரத்தால் நிறையவே செய்யமுடியும் என்பதையும் அநுரா அறியவேண்டும்.

ஆட்சியைக் கலைக்கலாம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கலாம். தேர்தலை நடாத்தி அதில வென்று பிரதமராகி அதிகாரத்தைக் கைப்பற்றலாம். இவையனைத்தும் கூட சாத்தியமாகாலாம்.

அப்போது அநுராவால் என்ன செய்யமுடியும்?

கோலத்தில் மீண்டும் காட்சிமாற முடியும். அவ்வளவுதான் 'கடல்வற்றி கருவாடு தின்ன காத்திருந்து குடல் வற்றிச் செத்தால் கொக்கு' என்கிறார் தம்பிமுத்து வாத்தியார்.

-தெருவாசி

## தீர்வு யோசனை குறித்து...

03-10-03 தொடக்கம் 05-10-03 வரை பொருளாதாரத்துறை நிபுணர்களுடன் அபிவிருத்தித் திட்டமிடல் சம்பந்தமான மாநாடு ஒன்று கலாநிதி ஜோய் மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், விடுதலைப்புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன் ஆகியோர் வன்னியிலிருந்து ஏற்கனவே சென்றுள்ளனர்.

பாரிஸில் சென்ற முறை ஆலோசனை நடத்தியவர்களுடன் 05-10-03 தொடக்கம் 07-10-03 வரை இடைக்கால திட்ட வரைவு தொடர்பாக மீண்டும் கலந்துரையாடவுள்ளனர்.

08-10-03 தொடக்கம் 10-10-03 வரை வெளிநாட்டு அரசியல் நிபுணர்களுடன் முதன்முறையாக அவர்களின் கருத்துக்களையும, ஆலோசனைகளையும் பெறவுள்ளனர்.

சமாதானம் தொடர்பான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு அயர்லாந்து ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளதால், அந்த நாட்டில் இந்த மாநாடுகளை நடத்துவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

### அரசாங்கமும்...

நிதி பீற்றர் கரோல் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் ரோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கான உதவிவழங்கும் மாநாட்டில் உலகவங்கி இலங்கைக்கு வருடமொன்றுக்கு இருநூறு மில்லியன் டொலர் வீதம் நான்கு வருடங்களுக்கு எண்ணூறு மில்லியன் டொலரினை வழங்க இணங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர் போராட்டம்...

மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்காரணமாக பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் உள்ளே நுழையமுடியாது பாடசாலையின் பின்புறத்திலுள்ள மைதானம் ஒன்றில் அமர்ந்திருந்தனர்.

இந்த விடயம் பற்றி பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், நமது பாடசாலையில் தற்போது அதிகளவான க.பொ.த உயர்தர மாணவர்கள் கல்விகற்று வருவதால், இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், அதனை நிவர்த்தி செய்வதற்கு போதிய வளங்கள் இருந்தும், பலாலி ஆசிரிய கலாசாலை அவ்விடத்தில் அமைந்துள்ளதால் தம்மால் முழுமையான பயனைப் பெறமுடியாதிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், முன்பு ஆசிரிய கலாசாலை நிர்வாகத்தினருடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தாலும் அவர்கள் அதனைச் செயற்படுத்தாத காரணத்தாலேயே இந்தப் போராட்டத்தை மாணவர்கள் நடத்தி வருவதாகவும் கூறினார்.

(ச,ய,இ)

சிங்களம் வழிகாட்டல் ஆசிரியர் மல்வான

- காலம் - 3முதல் 5 மாதங்கள்
- அரச நிர்வாகிகள், பல்கலை மாணவர்கள், தனியார் துறையினருக்கான பேச்சு சிங்கள வகுப்பு இப்போது நடைபெறுகிறது.
- A/L மாணவர்களுக்கான அறிமுக வகுப்புக்கள்
- 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான சிங்களம்

இன்றுமுதல் இணைந்து கொள்ளலாம்.

விவரங்களுக்கு
திரு.மல்வான
56, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி-1608)

ஆளுமை வளர்ச்சி

இராமகிருஷ்ணமிஷன், தியாகராஜநகர் சென்னையைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி போதமயானந்தர் மகராஜ் அவர்களால் நடாத்தப்படும்

பயிற்சிப் பட்டறை

இடம்:- யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
திகதி:- 02.10.2003
காலம்:- காலை 9.30 - மதியம் 12.30 வரை

தொடக்க உரையை யாழ்.மாவட்ட செயலர்
திரு செ.பத்மநாதன் அவர்கள் நிகழ்த்துவார்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களும்
- பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்களும்

அனுமதிக்கப்படுவர்கள்.

நன்றி

ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்
பருத்தித்துறை (சி-1623)

## யாழ்.மாவட்ட

# வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கத்தினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர்

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், யாழ்.மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களை பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய மூப்பின் அடிப்படையில் நியமிக்கக்கோரி, பிரதம மந்திரி, தொழில் அமைச்சருக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது. மகஜரில் அந்த தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டாதாரிகள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளை தங்களுக்கு வேதனையுடன் அறியத்தருவதுடன், மனிதாபிமானத்துடன் கூடிய இரக்க சிந்தனையுடனும், தங்களிடம் தகுந்த பதிலையும் எதிர்பார்க்கின்றோம்.

கடந்தகால நிகழ்கால அரசாங்கங்கள் ஆட்சிக்கு வருவதும், ஆட்சியை விட்டு வெளியேறுவதும் எமது அரசியலில் காணப்படும் இயல்பாகும். எனினும், அரசு தற்காலத்தில் நாட்டில் பல்வேறு பகுதியிலும் பல்கலைக் கழங்களை நிறுவி, மேலும் மேலும் உயர்கல்வியைத் தொடர்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்கிவரும் இந்த நிலையில் பல்கலைக்கழக கல்வியைத் தொடரும் மாணவர்கள் கடுமையாக உழைத்து வியர்வை சிந்தி தாம் கற்ற கல்விக்கு ஏற்ற வேலை வாய்ப்பு பெற்று தமது அன்றாட வாழ்க்கையை நடத்துவ தற்காகும். இதுவே ஒவ்வொரு பட்டதாரியினதும் எதிர்பார்ப்பாகும்.

இந்தவகையில் ஒவ்வொரு பட்டதாரிக்கும் உரிய தகைமைக்கேற்ப வேலைவாய்ப்பைகொடுப்பது ஒவ்வொரு அரசாங்கத்தின் கடமை என்பது தாழ்மையான சிந்தனையாகும். ஆனால் பல வாக்குறுதியைக் கொடுத்து அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் மக்கள் குறித்து கரிசனையற்றநிலை எமக்கு வேதனையை அளிக்கின்றது. இந்தவகையில் கடந்த, தற்கால அரசாங்கங்கள் நாட்டின் பட்டதாரிகள் தொடர்பாக, கரிசனையற்றநிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் நாட்டில் பதவிக்கு வந்த அரசாங்கமானது, நன்கு திட்டமிட்டமுறையில் நாட்டில் செயற்திட்டங்ளை மேற்கொண்டதாக எமக்கு தோன்றவில்லை. அதன் விளைவாகவே நாட்டில் பாரியளவில வேலையற்ற பட்டதாரிகள் தொகை அதிகரித்துள்ளது.

குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 1998 முதல்2002 வழமையான கல்வி ஆண்டில் இருந்து வெளியேறிய சுமார் 3000 இக்கு மேற்பட்ட பட்டதாரிகள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றனர். இந்தவகையில் வடக்கில் அரச திணைக்களங்கள் உதாரணமாக மாவட்டச் செயலகம், பிரதேசச் செயலகங்கள், பாடசாலைகள், இளைஞர் சேவைகள் மற்றும் மேலும் பல அரச திணைக்களங்களில் வெற்றிடங்கள் உள்ளதை நாம் அறிகின்றோம்.

உதாரணமாக வடக்கு - கிழக்கிலுள்ள அரச பாடசாலைகளில் 300 அதிபர் வெற்றிடங்கள் உண்டென்பதை நாம் அறிகின்றோம்.

அத்துடன், அரசாங்கமும் உடனடியாக அந்த வெற்றிடங்களுக்கு 1000 பட்டதாரி ஆசிரியர்களை நிரப்புவதாக வாக்குறுதி அளித்துள்ளது.

எனவே, மேலே கூறப்பட்ட நிலைமைகளை கருத்திற்கொண்டு பட்டதாரியான எங்களின் நிலைமைகளைப் புரிந்துகொண்டு பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய கால மூப்பின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 1000 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாக, உரிய அதிகாரிகளி[illegible] பணிப்பதோடு மனித வளங்கள[illegible] சரியான முறையில் பயன்படுத்த முடியாது வேலையற்று இருக்கும் பட்டதாரிகளை ஏனைய திணைக் களங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமனங்களை வழங்கும்படி, மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். (ச,ய)

### நெருப்பாற்று...

தளபதி லெப்.கேணல் நகுலனும் ஏற்றிவைத்தனர்.

சாள்ஸ் அன்ரனியின் உருவப் படத்திற்கு கேணல் விதுஷா, கேணல் துர்க்கா ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

தளபதி லெப்.கேணல் கோபித் நூலினை வெளியிட்டு வைக்க, தமிழீழ கல்விக் க்ழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து வெளியீட்டு உரையினை கேணல் பால்ராஜ்ஜும், சிறப்புரையினை நிலாந்தனும், மதிப்பீட்டுரையை க.வே.பால குமாரனும் ஆற்றினர்.

இந்த நிகழ்வில் - கேணல் ஜெயம், கேணல் தினேஷ் மாஸ்ரர், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி உட்பட விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் கைலாசபதி கலையரங்கில் இந்த நூல் வெளியீட்டுவிழா நேற்று இடம்பெற்றது.

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் தளபதிகளில் ஒருவரான அமுதாப் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரினை இந்தப் படையணியைச் சேர்ந்த பிரதாப் ஏற்றினார். தேசியக் கொடியினை படையணியின் துணைத் தளபதி லெப். கேணல் பல்லவன் ஏற்றினார்.

தொடர்ந்து லெப்.சீலனின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடரினை லெப்.கேணல் ராஜனின் தாயார் ஏற்றிவைக்க, மலர்மாலையை மேஜர் சாரங்கனின் தாயார் அணிவித்தார். மௌன அஞ்சலியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வரவேற்புரையை தளபதி லோறன்ஸ்ும், தலைமையுரையை தளபதி அமுதாப்பும், சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், வெளியீட்டுரையை கலைக்கோன் ஆசிரியரும் ஆற்றினர்.

நூலினை தளபதி பல்லவன் வெளியிட்டுவைக்க அதனை மாவீரர் லெப்.கேணல் ஜஸ்ரினின் தயார் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து கவிஞர் வளவை வளவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி இதயநாதனும் பெற்றுக்கொண்டனர்.

மதிப்பீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி என்.சண்முகலிங்கம் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர்.(111,91)

## நமது ஈழநாடு பத்திரிகை...

இணைத்துக்கொண்டு வெற்றிபெறுகின்ற அளவிலே நமது ஈழநாடு உள்ளது.

இந்தப் பத்திரிகை ஒருவருடத்திற்கு முன் இந்த மாவட்டத்தில் வெளிவரத் தொடங்கியது. கடந்த ஒருவருட காலமாக இந்தப் பத்திரிகையினுடைய வாசகன் என்ற உரிமை எனக்கும் உரியது. ஏனெனில் ஒவ்வொரு நாளும் இந்தப் பத்திரிகையை நான் வாசிப்பது வழக்கம். ஆரம்பகாலத்திலிருந்ததை விடவும் தற்போது இதனுடைய மாற்றம் வரவேற்கத்தக்கதாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(ச,ய)

## அதிகாரமுள்ள இடைக்கால...

எமது அபிலாஷைகளை தங்களுக்குத் தெரியப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

பெரிய இடியுடன் கூடிய ஆரவாரத்தோடு எழுந்த மின்னலாக மிளிர்ந்த சமாதான வெளிச்சம் வெறும் தெறிப்புத்தானா? என்று எண்ணி ஏக்கம் கொண்டாலும் உரம்கொண்ட கடந்த கால நினைவுகளோடு உங்களுடன் உசாவுகின்றோம்.

போர் நிறுத்தம் வந்தது. ஒப்பந்தம் நிகழ்ந்தது. ஏ-9 திறந்தது, மந்திரிகள், பத்திரிகையாளர்கள் வந்து சென்றனர். சமாதான சைக்கிளோட்டம், சமாதானச் சுற்றுலா, சமாதான குதிரையோட்டம் எல்லாம் நடந்தன.

லொறிகள் வந்துபோயின. கொழும்புச் சரக்குகள் வடக்கு - கிழக்கில் குவிந்தன. வியாபாரம் கொடிகட்டிப் பறந்தது. ஆனால், நடந்தது என்ன?

எமது வீட்டுக் கோடிகளை இன்னும் பார்க்கமுடியவில்லை. எமது வாசல்படியில் மிதிவெடி அகற்றப்படவில்லை. எமது கடல், வயல்வெளிகளில் எமது உறவுகள் எண்ணம்போல் தொழில் செய்ய முடியவில்லை. எமது பாடசாலைகளில் எமக்கு ஏற்ற கற்றல், கற்பித்தல் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டதாகவில்லை, ஏராளமான பாடசாலைகள் சட்டரீதியற்ற பாதுகாப்பு வலயங்களுள் படையினர் கட்டுப்பாட்டில் காடு மண்டியுள்ளது. எமது கல்வித்தரம் வீழ்ந்து செல்கிறது. எமது பாடசாலையைச் சூழ இராணுவக் காவலரண்களும், உள்ளே செல்வதற்கு அடையாள அட்டையைக் காண்பித்துச் செல்வதற்கும் எமது மனங்களில் பாடசாலையோர் சிறைச்சாலை போன்றது என்ற எண்ணத்தினை ஏற்படுத்தி நாம் இயல்பாகக் கற்பதற்கு எமது மனங்களில் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. இவை தொடர்வதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். மின்சாரம் இன்றி, போக்குவரத்து வசதியின்றி, பொருளாதார தடைகள் நிறைந்தபோது காணப்பட்ட கல்வித்தரப் பெறுமானம் தற்போது வீழ்ச்சிகண்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து அதில் எதுவித மாற்றமும் காணப்படவில்லை. எனவே எமது வாழ்வியலில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தி ஒரு சுமுகமான ஒரு இயல்பு நிலை உண்[illegible]வதற்கும் எமது மண்ணில் ந[illegible] சுதந்திரமாகக் கற்பதற்கும் எமது த[illegible]கத்திற்கு ஏற்றவாறான கல்வித்தரத்தினை உயர்த்துவதற்கு வட - கிழக்கு மாகாணங்களில் ஒரு அதிகாரமுள்ள ஒரு இடைக்கால நிர்வாகம் அமையவேண்டும். அதில் நீதி, நிதி சட்டம், காணி, பாதுகாப்பு என்பன உள்ளடக்கப்படவேண்டும். இப்படியான ஒரு அதிகாரம் மிக்க, தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு இடைக்கால நிர்வாகத்தினையே தாங்கள் பெறவேண்டும் என்பதனை தமிழ் மாணவர்களாகிய நாம் தங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச,ய,இ)

31 ம் நாள் நினைவஞ்சலி

அமரர் திருமதி ரீற்றம்மா பிரான்சிஸ் பவுலப்[illegible]

02.09.03 அன்று எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச்செய்[illegible] கேட்டு உடன்வந்து எமக்கு உதவிகள் புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் பல புரிந்த குருக்கள், கன்னியருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்றுகாலை 8 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலமாதா தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறும், இதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன். பிள்ளைகள்
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

(சி-1632)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.